# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 ஐப்பசி 5 வெள்ளிக்கிழமை (22-10-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 283


# ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் ஒருவரை நிறுத்த தமிழ்க்கட்சிகள் முயற்சி!

கொழும்பு, ஒக்ரோபர் 22

அடுத்து வரும் மாதங்களில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் ஒருவரை பொது வேட்பாளராக நிறுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழ் மக்கள் தமது விருப்பு வெறுப்புக்களை எடுத்துக் காட்டும் வகையில் தமிழர் ஒருவரைப் பொது வேட்பாளராக நிறுத்துவது தொடர்பாக ரெலோ, புளொட், ஈ. பி. ஆர். எல். எவ். ஆகிய அமைப்புக்கள் பேசி வருகின்றன என்றும்—

இளைப்பாறிய நீதிபதி அல்லது உயர் அதிகாரி ஒருவரை பொது வேட்பாளராக நியமிக்க அவை முயற்சி எடுத்துள்ளன என்றும்– கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த தேர்தல் தொடர்பாக விடுதலைப் புலிகள் கொண்டுள்ள நிலைப்பாட்டை அறிந்து அவர்கள் விருப்பப்படி தமிழர் ஒருவரை பொது வேட்பாளராக நியமிக்கலாம் என்றும்—

அவர்கள் விரும்பும் பட்சத்தில் தாம் வேட்பாளராக நிற்கத் தயார் என்றும் — தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். (இ-3)

# டிசம்பரில் தேர்தலை நடத்த வேண்டாம்

## முஸ்லிம் எம்.பிக்கள் கோரிக்கை

கொழும்பு, ஒக். 22

ஜனாதிபதித் தேர்தலை டிசம்பர் மாதத்தில் நடத்த வேண்டாம் என்று அரச தரப்பைச் சேர்ந்த ஒன்பது முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்க உயர் பீடத்தைக் கோரியுள்ளனர்.

முஸ்லிம் மக்களின் ஹாஜ் யாத்திரை அந்த மாதத்தில் வருவதால் அந்தச் சமயத்தில் தேர்தலை நடத்த வேண்டாம் என்று அவர்கள் கோரியுள்ளனர்.

அதே சமயம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் கட்சிகள் மும்முரமாக பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளன.

புதிய இடதுசாரி முன்னணியும், ஜே. வி. பியும் இணைந்து பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த முயற்சி எடுத்துள்ளன.

அதே சமயம் — ஐ. தே. கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட கொழும்பு மாநகர சபை முன்னாள் மேயர் சிறிசேன கூரேயும் போட்டியிட முயற்சி எடுத்துள்ளதாகக் கூறப்பட்டது.

(இ 3-150

# வடக்கு-கிழக்கு வருவார்ரணில்

## தேர்தல் பிரசாரம் நடத்த

கொழும்பு, ஒக்ரோபர் 22

ஜனாதிபதி தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக தாம் வடக்கு – கிழக்கு மாகாணத்துக்கு செல்லத் திட்டமிட்டுள்ளதாக ஐ. தே. க தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐ.தே.க. செயற்குழு நேற்று மாலை கூடி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி வேட்பாளராக ஏகமனதாக தெரிவு செய்த பின்னர் அவர் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இதனைத் தெரிவித்தார். [12 ஆம் பக்கம் பார்க்க]

# இலங்கை தூதரகம்முன் ஆர்ப்பாட்டம்

சென்னை, ஒக். 22

இலங்கையில் தமிழ்மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளை கண்டித்து சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகம் முன்பாக நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று இடம் பெற்றது.

தமிழ் பாட்டாளி மக்கள் கழகத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் இலங்கை அரசுக்கு எதிராகக் கோஷங்கள் எழுப்பப்பட்டன. பதாகைகளும் கட்டப்பட்டிருந்தன.

பாதுகாப்புக்கு பெரும் அளவில் பொலீஸார் குவிக்கப்பட்டிருந்தனர். (இ-3)

# குண்டுவெடிப்பை அடுத்து 20 தமிழர் கொழும்பில் கைது

## தடுத்து வைத்து விசாரணை

கொழும்பு, ஒக். 22

கொழும்பு—புறக்கோட்டை மத்திய பஸ் நிலையத்தில் கடந்த திங்கள் இரவு இடம்பெற்ற குண்டு வெடிப்புத் தொடர்பாக 20 தமிழர் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

அவர்களில் பெரும்பாலானோர் மலையகத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்பட்டது. [இ-3]

# திருமலையில் சுற்றிவளைப்பு

திருகோணமலை, ஒக்.22

திருகோணமலை உவர்மலைப் பகுதி நேற்று மாலை 6 மணிக்குச் சுற்றி வளைக்கப்பட்டுத் தேடுதல் இடம்பெற்றது.

அந்தப் பகுதியைச் சேர்ந்த ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள உவர்மலை மக்கெஸ்ரர் விளையாட்டுமைதானத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுத் துருவித்துருவி விசாரிக்கப்பட்டனர்

சிலர் தடுத்துவைக்கப்பட்டனர் என்று கூறப்பட்டது. (இ-3)

# களுத்துறைச் சிறையில் சர்வமதப் பிரார்த்தனை

## ராஜீவ் கொலை வழக்கு எதிரிகளுக்கு கருணை காட்டக் கோரி

கொழும்பு, ஒக். 22

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைவழக்கு குற்றவாளிகள் நால்வருக்கும் விதிக்கப்பட்டுள்ள மரண தண்டனைத் தீர்ப்பை மறு பரிசீலனை செய்யுமாறு கோரி களுத்துறைச் சிறைச்சாலையில் உள்ள தமிழ்க் கைதிகள் சர்வமதப் பிரார்த்தனை ஒன்றை ஆரம்பித்துள்ளனர்

நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பிரார்த்தனையில் சகல மதங்களையும் சேர்ந்த 800 தமிழ்க் கைதிகள் பங்கு கொண்டனர்.

தமது கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை தமிழ்க் கைதி தமிழ் காங்கிரஸ் தலைவர் (12 ஆம் பக்கம் பார்க்க)

# புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் இங்கு வெளியாகின

யாழ்ப்பாணம், ஒக். 22

கடந்த ஒகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் நேற்று யாழ்ப்பாணத்தில் வெளியாகின.

திருகோணமலையில் இருந்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட இந்த முடிவுகள் வலய அலுவலகங்கள் மூலமாக பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டன.

(இ-3-5-9-10-51)

# நேற்று முன்தினம் முதல் மின்சார வெட்டு அமுல்

யாழ்ப்பாணம், ஒக். 22

24 மணி நேர மின்சாரம் வழங்கப்பட்டுவரும் வலிகாமம் மற்றும் வடமராட்சிப் பகுதிகளில் ஒன்று விட்டு ஒரு தினம் ஒரு குறிப்பிட்ட நேரத்துக்கு சுழற்சி முறையில் மின்வெட்டு அமுல்செய்யப்பட்டு வருவதாக மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் புதிய மின்வெட்டு நடைமுறை நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வந்துள்ளது.

இதன்படி வடமராட்சிப் குதியிலும் வலிகாமத்தில் பர்வேலி, கோப்பாய், இருநீாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை ஆகிய பகுதிகளிலும் ஒன்று விட்டு ஒரு தினம் மாலை 6.30மணிமுதல் இரவு 9.30 மணிவரை மின்வெட்டு அமுல்செய்யப்படும் என்று மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை —

நல்லூர், அரியாலை, கல்வியங்காடு தவிர்ந்த யாழ். மாநகரசபைப் பகுதிகளில் இந்த நடைமுறை பின்பற்றப்படாத போதிலும் மின் பளுவைப் பொறுத்து குறிப்பிட்ட ஒரு மின்மாற்றியூடாக மின் பெறும் பிரதேசங்களில் மின் [12 ஆம் பக்கம் பார்க்க]



தேர்தலோடையாவது வந்து அவலங்களைப் பார்க்கட்டும் ... !

திருகோணமலையில்

# மேகவதி துணை ஜனாதிபதி

இந்தோனேசியாவில் அப்துல் ரஹ்மான் வாஹிட் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து அந்நாட்டுநாடாளுமன்றம்நேற்று எதிர்க்கட்சித் தலைவி மேகவதி சுவர்ணபுத்ரியைத் துணை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தது.

தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட இருவேட்பாளர்கள் விலகிக் கொண்டதைத் தொடர்ந்து எஞ்சியிருந்த ஒரேஒரு வேட்பாளரை நூற்றுக்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் மேகவதி தோற்கடித்தார்.

நேற்றுமாலை துணைஜனாதிபதியாக பதவிப்பிரமாணம் செய்துகொண்ட பிறகு பேசிய மேகவதி மக்கள் நலனை மேம்படுத்துவதே தமதுமுதல் கடமையாக இருக்கும் என்றார்.

ஜகார்த்தாவில் வெடிக் விருந்த பெருங்குழப்பம் மேகவதி துணை ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதையடுத்து அடங்கிப்போனது.] [இ-4

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## யா தேவரையாளி இந்துக் கல்லூரி

## பரிசளிப்பு விழா 1999

காலம்: 23 10–1999 சனி பி, ப. 2-30 மணி
இடம்: கல்லூரி அரங்கு

முதன்மை விருந்தினர்
**பேராசிரியர் S. சத்தியசீலன்**
B. A. (Hons), M. A PhD.
((தலைவர், வரலாற்றுத்துறை யாழ். பல்கலைக்கழகம்)

பரிசில் வழங்குனர்
**திருமதி அனுஷியா சத்தியசீலன்**
விரிவுரையாளர், கல்வியியற்றுறை யாழ் பல்கலைக்கழகம்

நெல்லியடி பாஸ்கரன் புலமைப் பரிசிலும் வழங்கப்படும்.

★ தங்களை அன்புடன் அழைக்கின்றோம் ★

**அதிபர், ஆசிரியர், ஊழியர், மாணவர்,**
**பா. அ ச., ப. மா, ச.**

(70219)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் மாணவியான
**செல்வி கௌசிகா மூர்த்தி**

அவர்கள் புலமைப்பரிசில் [பரீட்சையில் 126 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காக அவரது உயர்விற்கு உந்து சக்தியாக அமைந்த யாழ். இந்து ஆரம்பபாடசாலையின் அதிபர், உபஅதிபர். ஆசிரியர்கள் அனைவரையும் மனமாரப் பாராட்டி நன்றி கூறுகின்றோம்.

திரு. திருமதி மூர்த்தி செல்வராணி (பெற்றோர்)
திரு. சு. குணசாந்தன் (சித்தப்பா)
திருமதி கு. ஜெயவேணி (சித்தி)

70, கடற்கரை வீதி,
நாவாந்துறை.

(70213)

---

## யா/யூனியன் கல்லூரி

தெல்லிப்பழை.

- **வருடாந்த பரிசளிப்பு விழாவும்**
- **கல்லூரிப் புதிய மண்டபத் திறப்பு விழாவும்**
- **பாண்ட் வாத்திய அரங்கேற்றமும்**

இடம்: கல்லூரிப் புதிய மண்டபம்
காலம்: 23.10.99 சனிக்கிழமை காலை 9.00 மணி
தலைவர்; திரு. க புண்ணியசீலன் அவர்கள் (அதிபர்)
பிரதம விருந்தினர்;
உயர்திரு. க. சண்முகநாதன் அவர்கள்
(அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்.)
சிறப்பு விருந்தினர்கள்:
உயர்திரு செ. மகாலிங்கம் அவர்கள்
(செயற்றிட்டப் பணிப்பாளர்,
யாழ். மாவட்ட புனர்வாழ்வு இணைப்புக் குழு)
உயர்திரு ஆ. வ. கணேசலிங்கம் அவர்கள்
(உதவிக் கல்விப்பணிப்பாளர்,
தெல்லிப்பழைக் கோட்டம்)
ஆசியுரை: சிவத்தமிழ் செல்வி
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்
பரிசில் வழங்குனர்:
திருமதி சுபத்திராதேவி சண்முகநாதன் அவர்கள்
தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பெற்றோர், பழைய மாணவர்.

யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.
(70225)

---

## இரங்கல் திருப்பலி

16—10—99 சனிக்கிழமை பிரான்ஸில் காலமான
**அமரர் ஜோண் றொபேட்**

அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மானிப்பாய் சந்தணமாதா ஆலயத்தில் சனிக்கிழமை [23-10-99] காலை 7-30மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இத்திருப்பலியில் உற்றார், உறவினர் அனைவரையும் பங்குபற்றி அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனைப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம்.

மாக்கஸ் வில்பிறட்
(மைத்துனர்)

குளோறிஎக்ஸ்,
கூளாவடி, ஆனைக்கோட்டை.

[70202]

---

## வர்த்தகர்களுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஒக். 22

குடாநாட்டிலிருந்து பொருள்களைக் கொழும்புக்கு ஏற்றுமதி செய்யும் வர்த்தகர்களுக்கும் வடமாகாண மீள் குடியமர்வு புனர்வாழ்வு அதிகார சபையின் தலைவர் கே. ஒபடகேக்கும் இடையில் முக்கிய கலந்துரையாடல் இன்று யாழ். செயலகத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் பங்கு கொள்ள விரும்பும் வர்த்தகப் பிரமுகர்களை இன்று பிற்பகல் 4 மணிக்கு செயலகத்துக்கு வருமாறு செயலக திட்டப் பணிப்பாளர் எஸ். மகாலிங்கம் கேட்டுள்ளார். (இ-9)

---

### புலமைப் பரிசில் 2000

10 ஆவது பரீட்சையில்
அதிகூடிய புள்ளி பெற்றோர்

த. திவாகர்
யா/பரியோவான் கல்.
ஜெ. கிருத்திகா
யா. இ. ஆ. பா.
சே. மதுரிகா
யா/ இ. ம ஆ. பா.
பெ. கிருஸ்ணப்பிரியா
யா/ சுண்டுக்குளி ம. க.
பா. தர்மினி
யா/ வடமராட்சி இ.ம. க.

அடுத்த பரீட்சை:
24 – 10 – 99

★ மாதாந்தப் பரீட்சை வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம்.

**BOND** யாழ்நகர்.
(70222)

---

## தேவை

யாழ். நகரில் இயங்கும்
பிரபல்யமான
வர்த்தக ஸ்தாபனம்
ஒன்றுக்கு
தகுதி வாய்ந்த
**பெண்**
**கணக்கு இலிகிதர்**
தேவை.
தகுதி, அனுபவத்திற்கேற்ப
சம்பளம் வழங்கப்படும்.

விளம்பர இல. 959,
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம்.
(70188)

---

### லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.
விஜயகாந்த் (இருவேடம்)
நடித்த
**ராஜதுரை**
(புதிய வெளியீடு)
காட்சிகள்: 10-30, 2–30
T.P.No. 070-212223
(70166)

---

### ராஜா

யாழ்ப்பாணம்
கார்த்திக் - நக்மா
மற்றும் பலர் நடித்த
**மேட்டுக்குடி**
10 30, 2–30
(சி/9344)

---

### நாகம்ஸ்

அன்னாகம்
மம்முட்டி - தேவயானி
நடித்த
**மறுமலர்ச்சி**
காட்சிகள்:
11-00, 2-30, 5-15
(புதிய நேரம்)
(70043)

---

### மங்களகரமான திறப்பு விழா

## தர்சன் தொலைத் தொடர்பு நிலையம்

ஆரம்பம்:– 22 — 10 — 99 வெள்ளிக்கிழமை (12 00) மணி
T. P. உள்ளூர்: 070– 212538
வெளியூர்: 0094 70 212538
-உரிமையாளர்

சங்கத்தானை,
சாவகச்சேரி.
(70223)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**திரு. ரொகான் சஞ்ஜேராஜு [J.P]**

[பொறுப்பதிகாரி- மதுவரித்திணைக்களம், தென்மராட்சி),
உதவிப் பொறுப்பதிகாரி, திக்கம் வடிசாலை பருத்தித்துறை

கௌரவ நீதி அமைச்சினால் யாழ். மாவட்ட
சமாதான நீதிவானாக
07-10-99 அன்று யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி
முன் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.
அவரது சமூகப்பணி மேன்மேலும் தொடர
வாழ்த்துகின்றோம்.

பணிப்பாளர், அங்கத்தவர்கள், பணியாளர்கள்,
பனை பனை, தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச்சங்கம்

(சி/9458)

---

மீசாலையில் அயோத்தி!

## அயோத்தி தொடர்பகம்

கண்டி வீதி, மீசாலை.

குதூகலமாக இன்று **22-10-99** ஆரம்பமாகின்றது.
தொலைபேசி இல-
உள்ளூர் – 070 – 212537
வெளியூர் - 0094 - 70212537

இத்துடன் இங்கு கட்டுப்பாட்டு விலையில்
தபால் முத்திரைகள்
ஆகியனவும் பெற்றுக் கொள்ளலாம்.
''உங்கள் சேவையில் நாம்''

அயோத்தி தொடர்பகம்,
மீசாலை.

(சி/9464)

---

## மரண அறிவித்தல்கள்

### சங்கரப்பிள்ளை கணபதிப்பிள்ளை

(இளைப்பாறிய அதிபர் அராலி வடக்கு அ.மி.த.க. பாட.)

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை கணபதிப்பிள்ளை 20-10-99 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சத்தியதேவியின் அன்புக் கணவரும் கஜனாவின் பாசமிகு தந்தையும் திருமதி ச. தையல்நாயகத்தின் [மூளாய்] சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அராலி தெற்கில் நேற்று நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கஜனா (மகள்)
ந. சுந்தரம்பிள்ளை. வி. அம்பலவாணர்,
வி. சிற்றம்பலம்.
[70199]

### சிவசம்பு சொர்ணலிங்கம்

வேலணை மேற்கை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சிவசம்பு சொர்ணலிங்கம் 21-10-99 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெயபாலனின் (ஜெர்மனி) அன்புத்தந்தையும், நவக்குமாரியின் (ஜேர்மனி) அன்பு மாமனாரும், சிவசம்பு இரத்தினம்மா தம்பதிகளின் அன்பு மகனும், சரவணை கிழக்கைச் சேர்ந்த தம்பையா செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான வைத்தியநாதன், மாசிலாமணி, இராசலெட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், அன்னம், இரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று (22–10–99) இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் தகனக்கிரியைக்காக வேலணை அம்பலவி மயானத்துக்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சொ. மகேஸ்வரி (மனைவி)
அரசகேசரி ஐங்கரன்
(பேரன்)

வேலணை மேற்கு,
வேலணை 08.
(70227)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சல் அறிமுக அட்டை பெறுவதற்கு விரைந்து விண்ணப்பிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 22

கடந்த ஜனவரி மாதம் தொடக்கம செப்ரெம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் சுமார் 10 ஆயிரம் அஞ்சல் அறிமுக அட்டைகள் தபால் திணைக்களத்தின் யாழ். பிரதேச நிர்வாக அலுவலகத்தால் விநியோகிக்கப் பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 9 ஆயிரம் மாணவர்களுக்கும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா போன்ற மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரம் மாணவர்களுக்குமே இவை வழங்கப்பட்டன.

பரீட்சைகள் மற்றும் போட்டிகளில் பங்கு பற்றும் மாணவர்களின் நன்மை கருதி அஞ்சல் அறிமுக அட்டைகள் வழங்கப்பட்டு வருவதாகவும்—

எனினும் அஞ்சல் அறிமுக அட்டைகளுக்கு விண்ணப்பிப் போர் கடைசிநேரம் வரை காத்திராது நேரகாலத்துடன் விண்ணப்பித்தால் 15 நாள்களின் பின் அவற்றைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் என்றும்—

திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜீ. சி. ஈ. சாதாரண தரப்பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்கள் விரைவில் தமது விண்ணப்பங்களை அனுப்பி அறிமுக அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் இந்த வட்டாரங்கள் ஆலோசனை வழங்கின.

தபால் திணைக்களத்தின் யாழ். பிரதேச நிர்வாக அலுவலகத்தின் கீழேயே கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களின் அஞ்சல் அறிமுக அட்டை விநியோகப் பணியும் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

[ஐ-10]

# நல்லூர், கல்வியங்காடு பகுதிகளில் அடிக்கடி மின் தடை

வலி. கிழக்கு ஒக், 22

நல்லூர், கல்வியங்காடு பகுதிகளில் இரவு வேளை அடிக்கடி ஏற்படும் மின் துண்டிப்பால் மின்பாவனையாளர்கள் பெரிதும் பாதிக்கப் பட்டு வருகின்றனர்.

கடந்த ஒருவார காலமாக இப்பகுதிகளில் இரவு 7 மணிக்கும் 8 மணிக்கும் இடையில் நாளாந்தம் மின் துண்டிக்கப் படுவதாகவும் சில தினங்கள் இரவு 7 மணிக்குத் துண்டிக் கப்படும் மின் மறுநாள் அதிகாலையே வழங்கப்படுவதாகவும்—

மின் பாவனையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கல்வியங்காடு இலங்கை நாயகி அம்மன் கோவிலுக்கு முன்பாக உள்ள மின்மாற்றி ஊடாக மின் பெறும் பிரதேசங்களிலேயே அடிக்கடி மின் தடைப்பட்டு வருகிறது.

(ஐ-18)

# வலி. கிழக்குப் பிரதேசத்தில் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கை

வலி. கிழக்கு, ஒக். 22

வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுவோர் மீது பொலீசாரும், கிராம சேவையாளர்களும் கடும் நடவடிக்கையினை மேற் கொண்டு வருகின்றனர்.

அண்மையில் ஊரெழு, உரும்பிராய்ப், பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சிலரைப் பொலீஸார் கைது செய்துள்ளனர், அவர்களது உற்பத்திப் பொருள்களையும் அழித்துள்ளனர்.

இதேவேளை—

கோப்பாய் மத்தி அச்சுவேலி போன்ற பகுதிகளில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுவோரை கிராம உத்தியோகஸ்தர்கள் இனம் கண்டு அவர்களை எச்சரித்ததுடன் தொழிலைத் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

[ஐ-180]

# ‘உ’ அட்டைக்கு 10 கிலோ நாட்டரிசி

யாழ்ப்பாணம், ஒக். 22

தீபாவளிப் பண்டிகையை ஒட்டி ‘உ’ அட்டை வைத்திருப்பவர்களுக்கு யாழ். செயலகத்தால் 10 கிலோ சிவப்பு நாட்டரிசி வழங்கப் படவுள்ளது.

ப, நோ. கூ. சங்கங்களில் கட்டுப் பரட்டு விலையில் இந்த அரிசியைப் பெற்றுக் கொள்ளலாம் என்று யாழ். செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

(ஐ-57

# வலி. வடக்குப் பிரதேசத்தில் மீளக்குடியேறிய மக்களிடையே பரவிவரும் புதுவித சருமநோய்

வலி. வடக்குப் பகுதிகளில் மீளக்குடியேறியுள்ள மக்களிடையே ஒரு வித சரும நோய் வேகமாகப் பரவி வருகின்றது.

கடும் சொறி. கடியுடன் கூடிய இச்சரும நோயினால் வயது வேறு பாடின்றி குழந்தைகள். பெண்கள், வயோதிபர்கள் என்று பலரும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றார்கள்.

உடலின் எப்பாகத்திலாவது சிறு பொக்களத்துடன் ஆரம்பமாகும் இந்த நோய் இலேசான தடம்போல உருவாகி கடும் சொறி கடியைக் கொடுப்பதாக நோயாளர்கள்தெரிவித்தனர்.

உடலின் தோல் பகுதிகளில் கறுத்தப் புள்ளிகள் போல ஏற்பட்டு அது நாளடைவில் உடலெங்கும் பரவுகிறது.

வலி. வடக்குப் பகுதி நீண்ட காலமாக இடப் பெயர்வுக்கு உள்ளான பகுதி என்பதால் மண்ணில் உண்டான கிருமிகளின் தாக்கமே இவை என்று வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-13)

# வீதியில் வெள்ளம் தேக்கம்

பண்டத்தரிப்பு பகுதியில் உள்ள புனித அந்தோனியார் ஆலய ஒழுங்கையும் கேணிக் கட்டு ஒழுங்கையும் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாத நிலையில் இருந்து வருகின்றன

இவ் வீதிகளில் மழை வெள்ளம் தேங்கி நின்று சேறும் சகதியுமாக போக்குவரத்திற்கு மிகவும் சீர்கெட்ட நிலையில் இருந்து வருவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது. இவ்விரு வீதிகளையும் முன்னுரிமை கொடுத்து திருத்தநடவடிக்கை மேற் கொள்ளப்பட வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இப்பகுதி மக்கள் கடித மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(ஐ-135)

# பரிசளிப்பு விழா

கொக்குவில் இந்துக் கல்லூரி பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் அதிபர் பொ. கமலநாதன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வீதி அபிவிருத்தி அதிகார சபை பிரதம பொறியியலாளர் இராசரட்ணம் நடராஜா கலந்து கொள்வார். கௌரவ விருந்தினராக நல்லூர் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சத்திய லெட்சுமி காங்கேயன் கலந்து கொள்வார்.

[இ-69]

# கும்பாபிஷேகம்

எழுதுமட்டுவாழ் பெரிய கேணிப் பிள்ளையார் கோயில் புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற உள்ளது.

கர்மாரம்பம் கடந்த புதனன்று ஆரம்பமாகியது.

நாளை சனிக்கிழமை காலை 9மணி முதல் பிற்பகல் 3 மணிவரை அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்துவர்.

(ஐ-30)

★ ★ ★

உடுவில் வடக்கு ஸ்ரீசொர்ண சித்தி பஞ்சமுக விநாயகருக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 6.09 மணி தொடக்கம் 7.20 மணிவரையில் மஹாகும்பாபிஷேகம் நடைபெற உள்ளது.

கும்பாபிஷேகத்துக்கான பூர்வாங்ககிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை காலை ஆரம்பமாகும். மறுநாள் சனிக்கிழமை காலை ஏழு மணிமுதல் விநாயகருக்கு பக்தர்கள் எண்ணெக் காப்பு சாத்துவார்கள்.

கும்பாபிஷேக விழாவில் யாழ். பிரதேச பண்பாட்டலுவல்கள் இணைப்பாளரான உதவிக் கல்விப்பணிப்பாளர் எம். எஸ். ஸ்ரீதயாளன், ஆசிரியர் ஆறு. திருமுருகன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

மஹாவித்துவான் பிரம்மஸ்ரீ மா. த. ந. வீரமணி ஐயர் அருளுரையும், உடுவில் கிராம சேவையாளர் செ. றொ. யேசுபாலன் சிறப்புரையும் ஆற்றுவர்.

பிரம்மஸ்ரீ சாமி. ஸ்ரீஸ்கந்த ராஜக் குருக்கள் பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடாத்தி வைப்பார்.

[ஐ-152]





(சி/9442)



## யாழ்ப்பாண மாநகர சபை
## கூறு விலை கோரல்

**ஜெனரேற்றர் 17.7 கே வி ஏ. – லிஸ்ரர் இனம்**

மேற்படி ஜெனரேற்றருக்குரிய பின்வரும் உதிரிப் பாகங்கள் உடனடியாக வழங்கக் கூடிய நிறுவனங்கள் தமது கூறு விலைகளை சீல் வைத்த உறையிலிட்டு 28—10—99 நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ "ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

| | | |
|---|---|---|
| 1. Piston Rings | 1st O/S | 3 sets |
| 2. Top and Bottom O/H Kit | | 1 only |
| 3. Big end Bearing Std. | | 3 sets (upper 3 and lower 3) |
| 4. Crank Oil Seal front and rear | | 1 set |
| 5. Injector nozzle | | 3 Nos (1 set) |
| 6. Fuel Elements | | 3 Nos. (1 set) |
| 7. Complete fuel lift pump | | 1 No. |

S. M. ponnampalam,
Act. Commissioner.

Municipal Council,
Jaffna.
20—10—1999

(சி/9441)



## திருவாசக முற்றோதல்

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 24—10—1999 மு. ப. 8 மணி முதல் திருவாசக முற்றோதல் நடைபெற திருவருள் கூட்டியுள்ளது. அன்பர்கள் அனைவரையும் பங்குகொண்டு பயன்பெறுமாறு மிகவினயமாக வேண்டுகின்றோம்

திருக்கேதீஸ்வரம் ஈழத்துச் சிவனடியார்
திருக்கூட்டத்தினர் சார்பாக

வே. சிவஞானம், க இரத்தினசிங்கம்
வண்ணை. சிவன்கோயில் தேவஸ்தானம்,
காங்கேசன்துறை வீதி,
வண்ணார்பண்ணை.

(70084)



## நல்லூர் பிரதேசசபை

**01. கட்டாக்காலி நாயை அழித்தல்**

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியின் அனுசரணையுடன் கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே வீட்டு வளர்ப்பு நாய்களைக் கட்டி வைத்து ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**02. நாய்க்கு தடுப்பூசி போடுதல்**

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு ஊசி போடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. நாய் வளர்ப்போர் அதற்கான உரிமத்தகடுகளை நல்லூர் பிரதேச சபையில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும். உரிமத்தகடு பெற்ற நாய்களுக்கு மட்டுமே தடுப்பூசி ஏற்றப்படும் என்பதை அறியத்தருகிறேன்.

**03. வியாபார உரிமம்**

இதுவரை நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட சகல வியாபார நிறுவனங்களும் இவ்வாண்டுக்கான வியாபார உரிமத்தை பெறத் தவறியிருப்பின் உடனடியாக உரிமத்தை பெற்று கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். பெறத்தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

க. மணிபல்லவராஜன்
தலைவர்

நல்லூர் பிரதேசசபை.

(சி/9439)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பால்மா இன்றி நிவாரணம்

ஒக்ரோபர் மாதத்துக்கான உலர்உணவு நிவாரணம் பால் மா இன்றி கடந்த திங்கள் முதல் வழங்கப்பட்டு வருகின்றது.

நிவாரணத்துக்குரிய பால் மா கொழும்பிலிருந்து வந்ததும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது

(இ-5)


தச்சன்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயம்

## வள்ளியம்மன் திருமணப் படனமும் கந்தபுராணப் பூர்த்தியும்

அன்புடையீர்!

எதிர்வரும் 24-10-99 ஞாயிற்றுக்கிழமை வள்ளியம்மன் திருமணப் படனமும் கந்தபுராணப் பூர்த்தியும் சிறப்பாய் நடந்தேற இறையருள் வேண்டுகிறோம்.

அன்றையதினம் காலை 6.00 மணிக்குப் பூசை ஆரம்பித்து கந்தபுராணப் படனம் தொடரும். பிற்பகல் 4.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று முருகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதராக எழுந்தருளி அருள் பாலிப்பார்.

பௌராணிகர்களும் ஆர்வலர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

அனைவரும் வருக! முருகன் அருள் பெறுக!

கரவெட்டி. பரிபாலன சபையார்.

(சி/9417)


## ஐ. தே. கட்சி இளைஞர் அணி ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஒக். 22

ஐக்கிய தேசியக் கட்சியின் இளைஞர் அணி கொழும்பு லிப்டன் சதுக்கத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டது.

ஜி.சீ.ஈ.உயர்தர வகுப்புக்கு புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள பொது உளச்சார்புப் பரீட்சை நகரப்பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்படுவதையே ஊக்குவிலகும் எனவும்—

இதனால் கிராமப்புற மாணவர்கள பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படும் வாய்ப்பை இழக்க நேரிடும் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள சார்பில் தெரிவிக்கப்பட்டது.

(இ-7)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் **கதிரித்தம்பி முருகையா**

உதயம் 20-04-1924 அஸ்தமனம் 22-09-1999

திதி: 22--10--1999

அன்பு அப்பாவே!

காலங்கள் கரைந்து சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்களை விட்டு மறையாது. பாசமுள்ள தலைவராய், தந்தையாய் எமக்கு வழிகாட்டியவரே! உங்கள் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனை வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

பழந்தோட்டம்,
அள — மேற்கு.

[70158]

## ஈராண்டு நினைவஞ்சலி



மலர்வு 22 — 12 — 1948

உதிர்வு 12 — 11 — 1997

**திருமதி சரோஜினிதேவி வீரராசா**

திதி: 22-10-1999

அன்பே உருவாய், ஆரோக்கியத்துடன். பண்பால் எமை அணைத்து இன்பமாய் வாழ வழிகாட்டினாய் அம்மா;
இடையில் பொல்லா நோயுன்னை எம்மிடமிருந்து பிரித்துவிட்ட துயரைத் தாங்க இதயமொன்றைத் தேடுகின்றோம் ... கிடைக்குமா அம்மா?

உன் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

சாந்தி! சாந்தி! சாந்தி!

- குடும்பத்தினர்

'செல்வகிரி'
அல்வாய் தெற்கு.
அல்வாய்.

(70163)

## திருமண அழைப்பு

உ
ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம.

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருஷம் ஐப்பசித் திங்கள் 5 ஆம் நாள் (22 - 10 - 1999) வெள்ளிக்கிழமை பகல் 10 02 மணி முதல் 10. 30 மணிவரையில் வரும் சித்தயோகம் கூடிய சுபமுகூர்த்த நல்வேளையில்.

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**குகதாஸ்**
[குகா, கனடா]
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**மாலதி**
[ரஜிதா]
அவர்களுக்கும்

எல்லாம் வல்ல விநாயகர் திருவருள் துணை கொண்டு, நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்றக் கலா மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்துவைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து வைபவத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி மு. சோமசுந்தரம்
குடும்பத்தினர்
ராஜன் அரிவு மில்
13 A, ஐயனார் கோவில் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

வ கணேசலிங்கம்
கண்ணன் மரத்தொழிலகம்
மகன், க. பிரேமதாசன் (கனடா)
அம்மன் வீதி,
பண்டத்தரிப்பு.

[70115] ★ இரு வீட்டார் அழைப்பு ★

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணில்
13 - 06 - 1922

ஆண்டவன் திருவடியில்
22 - 09 - 1999

அமரர் **ஆறுமுகம் வேலாயுதர்**

22 - 09 - 99 அன்று அமரத்துவம் அடைந்த கைதடி கிழக்கைச் சேர்ந்த எங்கள் குடும்பத்தின் குல விளக்காய் விளங்கிய எங்கள் அப்பாவின் மரணச் செய்தி கேட்டு எமது துயரத்தில் பங்கு கொண்டு ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் எமது இல்லத்தில் இன்று (22 - 10 - 99) வெள்ளிக்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன விருந்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அவரின் ஆத்மா சாந்தியடைய வேண்டும் என கைதடி விநாயகப் பெருமானை வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஞானகிரி,
கைதடி கிழக்கு,
கைதடி.

[70108]

## திருமண அழைப்பு

உ
சிவமயம்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி ஆண்டு ஐப்பசி மாதம் 5 ஆம் நாள் (22-10-99) வெள்ளிக்கிழமை பகல் 11. 15 மணி முதல் 12. 15 மணி வரையுள்ள உத்தரட்டாதி நட்ஷத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,

திரு. சுப்பிரமணியம் அவர்களின்
கனிஷ்ட புத்திரன்
திருநிறைசெல்வன்
**தவராஜா**
அவர்களுக்கும்

திரு திருமதி சிதம்பரநாதன் அவர்களின்
சிரேஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**சர்மிலா**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்,

திருமணமண்டபம்
**அருள்மிகு ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயம்**
'ஹம் — உன் றுப்' தொ. பே. 02381 302 223

தங்கள் நல்வரவை நாடும்

திரு. சுப்பிரமணியம்
குடும்பத்தினர்
கந்தரோடை
சுன்னாகம்.

திரு. திருமதி சிதம்பரநாதன்
குடும்பத்தினர்
இராஜ வீதி
[illegible]

(70099)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## ஜனாதிபதித் தேர்தல்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமது பதவிக் காலம் முடிவதற்கு சுமார் ஒரு வருட காலம் இருக்கும்போதே தேர்தல் அறிவிப்பை விடுத்துள்ளார். இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் கண்டு நாட்டில் சமாதானத்தை நிலைநாட்டுவதே தேர்தலை முந்தி நடத்துவதன் நோக்கம் என அவர் கூறியுள்ளார்.

மக்களின் ஆதரவு கிடைத்துத் தாம் வெற்றிபெறும் பட்சத்தில் இரண்டு மூன்று மாதங்களில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கண்டு, போரை நிறுத்தி விடுவதாகவும் அவர் வாக்குறுதி அளித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்த வாக்குறுதியை நம்பமுடியுமா என்ற கேள்வி தமிழர் மனங்களில் எழுகிறது. ஐந்து வருடங்களுக்கு முன்னர் நடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் இனப்பிரச்சினைக்குச் சமாதான வழியில் அரசியல் தீர்வு ஒன்றைக் காண இருப்பதாகவே இவர் வாக்குறுதி அளித்திருந்தார்.

எனினும் அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான முழுமையான மனப்பூர்வமான நடவடிக்கை எதனையும் காணமுடியவில்லை. அரசியல் தீர்வுப்பொதி ஒன்றை உருவாக்கிய போதிலும் அதனை முன்னெடுப்பதில் காட்டிய அக்கறையை விடப் போரை நடத்துவதிலேயே கடந்த நான்கு வருட காலமும் செலவழிந்தது.

அரசியல் தீர்வை முன்னெடுத்து நிறைவேற்ற முடியாமைக்கு ஜனாதிபதியும் அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களும் பல காரணங்களைக் கூறுகின்றனர். குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசியல் தீர்வைக் கொண்டு வருவதற்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை என்பது அவர்களது பிரதான குற்றச்சாட்டு.

அரசாங்கம் பதவிக்கு வந்தவுடனேயே அதனது தீர்வு நடவடிக்கைகளுக்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைப்பு வழங்காது என்பது மிகத் தெளிவாகத் தெரிந்தது. அது போலவே, விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சு முறிவடைந்ததும் அரசியல் தீர்வுக்கு அவர்களின் ஆதரவைப் பெறுவது கஷ்டம் என்பது அரசாங்கத்துக்குப் புலனாகி இருக்க வேண்டும்.

அந்தக் கட்டத்திலேயே ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்து புதியதேர்தல் ஒன்றை நடத்திதமது பலத்தைப்பெருக்கி இருக்கலாம். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் முழுமையான விருப்பமும் உண்மையான ஈடுபாடும் இருந்திருப்பின் போருக்குப் பதிலாக சமாதானத்தைக் காண்பதற்கான வேறு ஏதாவது மாற்று வழிகளை அரசு கைக் கொண்டிருக்க வேண்டும்.

அவ்வாறன்றி சமாதானத்துக்கான போர் என்று அர்த்தமற்ற புதிய நிலைப்பாடு ஒன்றை அரசாங்கத்தினர் கைக்கொண்டனர். போர்மூலம் சமாதானத்தை அடைய முடியாது என்பதனை இப்போது புரிந்து கொண்டு சமாதானத்துக்கு— இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு — மக்களின் ஆணையை ஜனாதிபதி கோருகிறார்.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் தென் இலங்கையின் அரசியல் தலைவர்கள் இனப்பிரச்சினையை தங்களுக்கு வாக்கு வாங்கும் ஒரு கருவியாக பயன்படுத்துவதையே இதுவரை கண்டிருக்கிறார்கள். இந்த அனுபவத்தில் சந்திரிகா குமாரதுங்க மீண்டும் ஜனாதிபதியாகப் பதவியேற்று இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பார் என்று தமிழர்கள் எவ்வாறு நம்பமுடியும்.

ஐ.தே.க சார்பில் போட்டியிடவிருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வெற்றியீட்டினும் இதுவரை காலமும் இருந்த தலைவர்களை விட இவர் புது வழி செய்வார் என்பதில் தமிழ் மக்கள் எவ்வாறு நம்பிக்கை கொள்ள முடியும்?

# அறிவுச் செல்வங்களை, அனுபவ ஞானங்களை

# ஒன்று திரட்டிக் காட்டும் வெள்ளிவிழா கண்காட்சி

யாழ். பல்கலைக்கழக வெள்ளிவிழாவை ஒட்டி அனைத்துப்பீடங்களும் ஒன்றிணைந்து நடத்தும் மாபெரும் கண்காட்சி பல்கலைக்கழகத்தில் தற்போது நடைபெற்று வருகிறது. அதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

**- கலாநிதி என். சண்முகலிங்கன் -**

யாழ்ப்பாண பல்கலைக்கழக வெள்ளிவிழா கால சிறப்பு நிகழ்வாக அனைத்து பீடங்களினதும் ஒன்றிணைந்த பெரும் முயற்சியால் 'வளமும் வளர்ச்சியும் என்ற கருப்பொருளிலான கண்காட்சி மூன்றாவது நாளாக இன்றும் தொடர்கின்றது.

பல்வேறு துறைகளினதும் அறிவுச் செல்வங்களும் அனுபவ ஞானங்களும் அழகிய காட்சிகளாய் இங்கே சித்திரிக்கப்படுகின்றன. அடிப்படை எண்ணக்கருக்களினைத் தெளிவுப்படுத்துவதிலிருந்து, சமூகப்பயனாக அறிவை பிரயோகித்தல் வரை காட்சி அம்சங்கள் விரிகின்றன எங்கள் வளங்களின் செழுமையை இனங்காண்பதிலும் எதிர்கால மேம்பாட்டுக்கான திசைகளைக் காட்டுவதிலும் ஒவ்வொரு துறையும் தத்தமக்குரிய தனித்துவம் துலங்க காட்சிகளைத் திட்டமிட்டிருக்கின்றன.

இயற்கைவள மேம்பாடு, தொழினுட்ப மேம்பாடு, பண்பாட்டு மேம்பாடு, உளநல– உடல்நல மேம்பாடு, சமூக மேம்பாடு என அனைத்து பரிமாணங்களையும் உள்ளடக்கிய கண்காட்சியாக இந்த அரிய வாய்ப்பு எமக்குக் கிடைத்திருக்கின்றது.

விலங்கியல், தாவரவியல், விவசாயம், புவியியல் போன்ற துறைசார் காட்சிகளிடை எங்கள் இயற்கைவள பயன்பாடு, முகாமைத்துவம் என்பன மிகச்சிறப்பாக வெளிப்படுத்தப்படுகின்றன. விவசாயம், கடல் வளம் போன்ற எங்களின் அடிப்படை பொருளாதாரச் செல்வங்களை மேம்படுத்துவதற்கான வழிவகைகள் இங்கே தெளிவுபடுத்தப்படுகின்றன. குடாநாட்டில் சூரிய, காற்று விசை சக்திகளின் எதிர்கால முக்கியத்துவத்தை பௌதிகவியல் காட்சிகள் உணர்த்தி நிற்கின்றன.

பாரம்பரிய மரபுவழி, தொழில் நுட்பங்களிலிருந்து நவீன இலத்திரனியல் தொழினுட்பம் வரை கண்காட்சியின் துறையெல்லாம் வியாபித்திருக்கக் காணலாம். குறிப்பாக தகவல் தொழினுட்பத்தின் கல்விசார் பயன்பாட்டுக்கு கட்டியம் கூறுவது போல கணனித்துறை காட்சிகள் விளங்குகின்றன. கணனிதுறை, பௌதிகதுறை, மருத்துவத்துறை, புவியியல் துறை என எங்கு சென்றாலும் கணனியின் ஆளுமை விரிவாக்கத்தை தரிசிக்க முடிகிறது.

சேர் பொன் இராமநாதனின் தரிசனம் தொடக்கம் உலக சஞ்சாரம் வரை கணணிக் காட்சி வழி கிடைக்கின்றது.

மருத்துவ உலகில் இலத்திரனியல் தொழில் நுட்பத்தின் பயன்பாடு நவீன சத்திர சிகிச்சை முறைகளிடை எத்துணை அற்புதங்களைச் செய்கின்றன். மருத்துவபீட கண்காட்சிகளிடை அதன் வியாபகத்தை வியந்து போய் நிற்கின்றோம். இத்துணை இலத்திரனியல் நுட்பங்களினதும் அடிப்படைகளை வெகு கலகலப்பாக பௌதிகவியல் காட்சிகள் எங்களுக்குத் தந்து நிற்கின்றன.

தகவல் தொழில்நுட்ப உலகில் ஆங்கில மொழியின் முக்கியத்துவம் ஆங்கில, மொழியியல் துறைசார் காட்சியறைகளில் கேட்கும்.

மனநலம், உடல்நலம் தொடர்பான செய்திகளும், காப்புக்களும் உள மருத்துவ சமூக மருத்துவ காட்சியறைகளிடை அழகாய் விளக்கம் பெறுகின்றன. நோய் வருமுன் காத்தலின் அவசியமும், வந்த பின் காத்தலின் வழிமுறைகளும் தெளிவாய்ச் சொல்லப்படுகின்றன.

எங்கள் பண்பாட்டின் தொன்மையும். செழுமையும் வரலாறு, தமிழ், இந்துநாகரிகம், சமஸ்கிருதம், கிறிஸ்தவநாகரிகம், நடனம், இசை, ஓவியம் போன்ற துறைகளின் வெளிப்பாடுகளிடை பேசப்படுகின்றன எங்களின் பாரம்பரிய வேர்களைக்கண்டு கொள்ளவும், எதிர்கால பண்பாட்டு மீளுருவாக்கத்திற்கான திசைகளை அறியவும் துணை செய்கின்றன.

ஒட்டு மொத்தமான சமூக மேம்பாட்டுக்கான முழுதளாவிய அறிவியல் பார்வையை சமூகவியல், அரசறிவியல், பொருளியல், புவியியல், வரலாறு என நீளும் சமூக விஞ்ஞான துறைகள் சார் காட்சி பொருள்கள் விளக்குகின்றன.

சமூகவியல் காட்சிகளில் ஒன்று பேசுவது போல 'இடரினும் தளராத எங்களின் ஆத்மபலத்துக்கு' காட்சியாய் இந்த வெள்ளிவிழாக் கண்காட்சி அமைந்து இருக்கின்றது எனலாம். எங்கள் சமூகம் இக் கண்காட்சியின் பயனை முழுமையாக பெற வேண்டும். அனைவரும் இந்த வாய்ப்பை தவறவிடாது பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

★

# மீள் திறப்பு விழா காணும்

# காரைநகர் பஸ் டிப்போ

யாழ்ப்பாணத்தில் கடந்த கால வன்செயல்களினால் சேதமடைந்தும் செயலிழந்தும் இருந்த பல நிறுவனங்களின் மீள் திறப்பு விழாக்களின் வரிசையிலே இன்று வடபிராந்திய போக்கு வரத்துச் சபையின் காரைநகர் சாலை திறப்புவிழா நடைபெறுகின்றது.

1990 ஆம் ஆண்டு ஜூன் 10 ஆம் திகதி முதல் முற்றாகச் செயலிழந்த காரைநகர் சாலை 1991 ஆம் ஆண்டு உக்கிர மோதல்களினால் முற்றாகச் சேதமடைந்தது.

தொடர்ந்து நடைபெற்ற யுத்தத்தினால் பல வருடங்கள் இயங்காமலிருந்த இந்தச் சாலை வடபகுதி மீள் குடியேற்ற புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபை மற்றும் இலங்கை மத்திய போக்குவரத்துச்சபை போன்றவற்றின் உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டு இன்று மீள் திறப்பு விழாவைக் காண்கிறது.

1996 ஆம் ஆண்டு யாழ். குடாநாடு இராணுவக்கட்டுப்பாட்டிற்குள் வந்த பின்னர் மத்திய போக்குவரத்துச் சபையால் வழங்கப்பட்ட ஒரு பஸ் மூலம் காரைநகரில் கடற்படையினரால் போக்குவரத்துச் சேவை ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் பொன்னாலை ஊடாக காரைநகருக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை. இதனால் ஊர்காவற்றுறை ஊடாகவே காரைநகருக்குச் செல்ல வேண்டிய நிலையேற்பட்டது.

இந்தக் காலத்தில் இராணுவச் சோதனை நியைங்களில்இடம்பெறும் சோதனை நடவடிக்கைகள் காரணமாக திட்டமிட்டப்படி பொன்னாலையில் இந்த பஸ்ஸுக்கான தொடர்பு சேவையினை நேரத்திற்கு செயலாற்ற முடியாமலிருந்தது.

இது தொடர்பாக வடபிராந்தியபோக்குவரத்துச்சபையின் பொது முகாமையாளர் வி. என். சொக்கலிங்கம் காரைநகர் கடற்படை அதிகாரிகள் மற்றும் 513ஆவது இராணுவப் பிரிவினருடனும் பல தடவைகள் தொடர்பு கொண்டதனால் காரைநகரிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு நேரடி பஸ்போக்குவரத்தை மேற்கொள்ள அனுமதி கிடைத்தது.

இதனைத் தொடர்ந்து காரைநகர் — யாழ்ப்பாணம் பஸ்சேவை இன்று சீராக நடத்தப்படுவதுடன் மீள் திறப்புவிழாவை ஒட்டி இன்று முதல் இந்தச்சாலையிலிருந்து யாழ்ப்பாணம் வரையும் ஐந்து பஸ் சேவைகள் நடைபெற இருப்பது குறிப்பிடத்தக்கது.

1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் காரைநகர் சாலையிலிருந்து கொழும்பு, வவுனியா, கிளிநொச்சி, முத்தையன்கட்டு, செட்டிக்குளம், நெடுங்கேணி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. இராமநாதபுரம், மன்னாங்கண்டல் போன்ற தூர இடங்களுக்கான பஸ்சேவைகளும் நடத்தப்பட்டன.

### கேசரி

குடாநாட்டிற்கு அப்பால் விவசாயக் குடியேற்றத்திட்டங்களுக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் திருப்திகரமான முறையில் இச் சேவைகள் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது,

யுத்தத்தினால் இன்று சீரழிந்து போயிருக்கும இந்த 9 போக்குவரத்துச் சேவையினை நினைத்துப்பார்க்கவே முடியாத நிலையேற்பட்டுள்ளது.

இந்தச் சேவைகள் நடத்தப்பட்ட காலத்தில் காரை நகரில் 23 ஆயிரம் பேர் வசித்து வந்தனர். தற்பொழுது இத் தொகை மிகவும் குறைவடைந்து விட்டது.

யாழ். நகரத்திலிருந்து 25 6 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள காரைநகரில் மீண்டும் போக்குவரத்துச்சாலை திறக்கப்படுகிறது. மக்களின் போக்குவரத்துப் பிரச்சினையை சீராக்கும் நோக்கில் இங்கு வருகை தந்துள்ள வடபிராந்திய போக்குவரத்துச் சபை அதிகாரிகளும் அவர்களுக்கு உறுதுணையாக இருந்த அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்களே.

★

### நாளை

ஐப்பசி 6

சனிக்கிழமை

திதி: திரயோதசி

காலை 6 30 வரை.

சதுர்த்தசி

பின் இரவு 5.07 வரை

நட்சத்திரம்: உத்தரட்டாதி

பிற்பகல் 4.22 வரை

சுபநேரம்: 3.02 — 4.32

ராகுகாலம்: 9.02—10.32

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

உண்மையுணர்வு என்னும் கதிரவனொளியில் நிலைத்து நில்லுங்கள் அதில்தான் மகிழ்ச்சியும் அமைதியும் இருக்கின்றன.

ஸ்ரீ அரவிந்தர்.

## கைதடியில் வீட்டில் கொள்ளை

கைதடி, ஒ. 22

கைதடி கிழக்கில் உள்ள வீடு ஒன்றினுள் புகுந்து ஆயுதந் தாங்கிய குழுவினர் இரண்டு லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுடைய நகை, பணம் எனபனவற்றை கொள்ளையிட்டுள்ளனர்.

கடந்த புதன் இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

தன்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்க களஞ்சியப் பொறுப்பாளர் க. குணராசசிங்கம் என்பவரது வீட்டிலேயே இரவு 8 மணியளவில் புகுந்த குழுவினர் வீட்டில் உள்ளவர்களை ஓர் அறையில் பூட்டி வைத்து விட்டு இக் கொள்ளையை நடத்தியுள்ளனர்.

[ஐ-74]

## கணித, விஞ்ஞான போட்டி ஒத்திவைப்பு

நாளை சனிக்கிழமை நடைபெறவிருந்த கணித, விஞ்ஞானப்போட்டி தவிர்க்கமுடியாத காரணத்தால் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும என்று யாழ். கல்விவலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்

[ஐ]

## உடுவில் மருந்தகத்துக்கு நிரந்தர கட்டடம்

சண்டிலிப்பாய், ஒக். 22

சுமார் 30 வருட காலமாக தனியார் வாடகைக் கட்டடத்தில் செயற்பட்டு வரும் உடுவில் அரசினர் மத்திய மருந்தகத்துக்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு நிதி உதவியளிக்க ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டம் முன்வந்துள்ளது.

உடுவில் ஆலடிப் பகுதியில் உள்ள அரசுக்கு சொந்தமான நான்கு பரப்புக் காணியில் இந்த மருந்தகக் கட்டடம் அமைக்கப்படவுள்ளதாகவும்—

இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்—

தெரியவருகின்றது.

(ஐ-135)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தேசிய கல்வி நிறுவகம்

**பட்டமளிப்பு வைபவ படம் 1999**

மேற்படி விழாப் படங்களை நாளை சனிக்கிழமை
யா/ இந்து மகளிர் கல்லூரியில்
பெற்றுக் கொள்ளவும்.

(70212) சிரேஷ்ட விரிவுரையாளர்.



இன்று முதல்!

## விநாயகர் புடைவை அகத்தினரின் தீபாவளி சிறப்புத் தள்ளுபடி விற்பனை

சாறி வகைகள், பஞ்சாபி சூட் வகைகள் மற்றும் பலவகை புடைவைத் தினிசுகளும் இன்று முதல் சிறப்புத் தள்ளுபடி விலையில் விற்பனையாகும் என்பதை எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

**விநாயகர் புடைவை அகம்**

62 A, நவீனசந்தை (உட்புறம்),
யாழ்ப்பாணம்.

(சி/9456)


## அரசாங்க கேள்வி அறிவித்தல்
## சலவைச்சேவை - 2000
### சுகாதார சேவைகள் பிரிவு
### யாழ்ப்பாணம்

2000 ஆண்டின் யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிரிவிலுள்ள அரசாங்க வைத்திய நிறுவனங்களுக்கு சலவைச்சேவையை வழங்குவதற்காக கேள்விகள் 1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு உடன் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்களைப் பெற விரும்புவோர் மீளளிப்புடனான கேள்விக் கட்டுப் பணத்தையும் உரிய கேள்விப் பத்திரப்பணத்தையும் செலுத்தி 25-10-99 ஆம் திகதி முதல் இப் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம். முழுவிவரங்களையும் அலுவலக நாள்களில் பார்வையிடலாம்.

கேள்விப்பத்திரங்கள் 18.11-1999 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை விநியோகிக்கப்படும்.

வைத்தியகலாநிதி
க. தா. சிவபாதம்,
பதில் மாகாணப் பிரதிப் பணிப்பாளர்
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

இல, 46, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/9455)

## விதைநெல் பெறமுடியாத நிலை

சண்டிலிப்பாய், ஒக். 22

தற்போது பெய்து வரும் பெருமழை காரணமாக அண்மையில் காலபோக நெல் விதைப்புச் செய்யப்பட்ட வயற் காணிகள் பலவற்றில் வெள்ளம் தேங்கி நிற்பதால் பயிரழிவு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

விதைநெல் பெற முடியாதிருக்கும் இக்கால கட்டத்தில் பயிரழிவு ஏற்பட்ட இடங்களில் மீண்டும் விதைப்புச் செய்ய முடியாதிருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை—

அண்மையில் பெய்த பெருமழையினால் தாழ்வான பள்ளக் காணிகளில் வெள்ளம் தேங்கி நின்றதால் இன்னமும் நெல் விதைப்பை மேற்கொள்ள முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர்.

[ஐ-135]


## D. M. I.

யாழ்நகர்

பகல் நேர வகுப்புக்கள்
[ Day Class ]

**A/L 2000**

**( கலைப்பிரிவு )**

சனி, ஞாயிறு

Tam. வழமையான ஆசிரியர் (7-8)
Log மோகன் (8-9)
Hi.c ஜோதீஸ்வரன் (9-10)
Chi மல்லிகா (9-10)
Dra. சந்திரன் (10-11)
Geo. இக்னேசியஸ் (11-12)
Pol. லிகோரி (12-1)

**D. SAM**

(சி/9451)


## அரசாங்க அறிவித்தல்
## தேருநர் பதிவேடுகள் திருத்தம் - 1999

1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 12[1] ஆம் பிரிவின்படி 1999 ஆம் ஆண்டிற்குரிய தேருநர் பதிவேடுகளின் திருத்தம் ஆரம்பமாகிவிட்டதென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

(2) தற்சமயம் நடைமுறையிலிருக்கும் தேருநர் பதிவேடுகளின் பிரதிகள் அல்லது அவற்றின் பாகங்கள் பதியும் அலுவலர்களால் கீழ்காணும் அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்படும்.

| பதிவேடுகள் அல்லது அவற்றின் பாகங்கள் பார்வைக்கு வைக்கப்படும். | பார்வைக்கு வைக்கப்படும் பதிவேடுகள் அல்லது அவற்றின் பாகங்கள் |
| --- | --- |
| 2. 1. மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம் | அரசாங்க அதிபர் அம்மாவட்டத்திற்குப் பதியும் அலுவலராயிருக்கும் அந்தத் தேர்தல் மாவட்டங்களுக்கான பூரணமான தேருநர் பதிவேட்டுப் பிரதி. |
| 2. 2. பிரதேச செயலகம் | பிரதேச செயலகப் பிரிவு அடங்கிய பகுதியிலுள்ள தேருநர் பெயர்களடங்கிய பதிவேட்டின் பாகங்கள். |

(3) ஏதாவதொரு தேர்தல் மாவட்டத்தில் ஒரு தேருநராயிருக்கத் தகுதியுள்ள ஒவ்வொருவரும் தமது பெயர் தேருநர் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கின்றதா என்று மேலே குறிப்பிடப்பட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் உள்ள தேருநர் பதிவேட்டை அல்லது பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட பாகத்தைப் பரிசீலனை செய்வதன் மூலம் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்.

(4) தேருநர் பதிவேட்டை அல்லது அதன் பொருத்தமான பாகத்தைப் பரிசீலனை செய்து தமது பெயர் அவ்விடாப்பில் பதியப்படவில்லை எனக் காணும் ஒவ்வொருவரும் 1999 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆம் திகதி 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதினர் ஒவ்வொருவரும் அதில் தமது பெயரை கீழ்க்காணும் முறையில் இடுவித்துக்கொள்ளலாம்.

4.1 இவ்வறிவித்தலோடு இணைக்கப்பட்டிருக்கும் இணைப்படிவத்தில் 1999 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பொருத்தமான தேர்தல் மாவட்டத்தின் பதியும் அலுவலருக்கு தங்கள்பகுதி கிராம உத்தியோகத்தர் ஊடாக எழுத்து மூலம் ஒரு விண்ணப்பத்தினைச் செய்யலாம். இதற்கான விண்ணப்பப்பத்திரத்தை உங்கள் பிரிவு கிராம உத்தியோகத்தரின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

4.2 பதியப்படுவதற்கான தகைமைபற்றி எல்லாத் தகவல்களையும் கிராம உத்தியோகத்தரினால் தமக்குக் கொடுக்கப்பட்ட விசேட பத்திரம் எதிலும் கொடுத்தும், கிராம உத்தியோகத்தரினால் கேட்கப்படும் ஏனைய விவரங்களைக் கொடுத்தும், இவ்விண்ணப்பப் பத்திரத்தை உங்கள் பிரிவின் கிராம உத்தியோகத்தரின் அலுவலகத்தில் கையளிக்கவும்.

(5) உங்களினால் கையளிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தை உங்கள் பிரிவின் கிராம உத்தியோகத்தர் தனது சிபார்சுடன் பதிவு அலுவலருக்கு அனுப்பி வைப்பார்.

..........................................

பதியும் அலுவலர்,
தேர்தல் மாவட்ட இல. 10, யாழ்ப்பாணம்.

செயலகம்,
யாழ்ப்பாணம்,
1999 ஒக்ரோபர் மாதம் 01 ஆம் திகதி.

## ஒரு தேருநராக பதியப்படுவதற்கான விண்ணப்பப்பத்திரம்-1999

................ பிரிவு கிராம உத்தியோகத்தர் ஊடாக பதியும் அலுவலர், தேர்தல் அலுவலகம், யாழ்ப்பாணம்.

.................................... ஆகிய நான் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் ஒரு தேருநராக பதிவு செய்து கொள்ள இத்தால் விண்ணப்பித்துக் கொள்கின்றேன்.

(2) எனது விண்ணப்பத்தின் சார்பாக கீழ்க்காணும் விவரங்கள் தரப்படுகின்றன.

2. 1. முழுப்பெயர்:

..............................................................

2. 2. முகவரி:

..............................................................

2. 3. பிறந்த திகதியும் வயதும்:

..............................................................

2. 4. 1999 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆம் திகதி மேற்படிமுகவரியில் சாதாரண குடியிருப்பாளரா?

..............................................................

2. 5. பால்: ..............................................

2. 6. இனம்: ..............................................

2. 7. பதிவு மூலம் இலங்கைப் பிரஜையாயின் பிரஜாவுரிமைப் பத்திர இலக்கத்தினைக் குறிப்பிடுக:

..............................................................

2. 8. தேசிய அடையாள அட்டை அல்லது விசேட அடையாள அட்டை இலக்கம்.

..............................................................

2. 9. கிராம உத்தியோகத்தரின் பிரிவு:

..............................................................

..................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி: ..............................

### கிராம உத்தியோகத்தரின் அறிக்கை

சிபார்சு செய்யப்படுகின்றது/செய்யப்படவில்லை. சிபார்சு செய்வதாயின் பின்வரும் விவரங்களை கிராம உத்தியோகத்தர் பூர்த்தி செய்தல் வேண்டும்

வாக்கெடுப்புப் பிரிவு: ..............................

வாக்கெடுப்பாளர் இலக்கம்: ..............................

வீட்டு இலக்கம்: ..............................

கிராமம்/வீதி: ..............................

..................................
கிராம உத்தியோகத்தரின் கையொப்பமும் பிரிவின் இலக்கமும்

திகதி: ..............................

[சி/9841]


## தேவை.

ஆங்கில தட்டெழுத்தாளர் (Typist) மொழி பெயர்ப்பு செய்யக் கூடியவர் (ஆண்) தேவை.

தொடர்பு:
**மருதம்ஸ்**
66, மணிக்கூட்டு வீதி,
(ஆஸ்பத்திரி முன்)
யாழ்ப்பாணம்.

(70195)



விரிவுரைகள் நடைபெறுகின்றன

## Degree Hall

[பட்டப்படிப்பகம்]
(வெலிங்டன் சந்திக்கு அருகில்)

**G.A.Q. - 2000**
**1st inCom-2000**

- ★ சகல பாடங்களும் ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படுகின்றன.
- ★ குறித்த காலத்திற்கு முன்பாக பாடத்திட்டங்கள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படும்.
- ★ பல்கலைக்கழகப் பதிவுகள் பாடமாற்ற விவகாரங்கள் எம்மால் செய்து தரப்படும்.

விரைவில் ஆரம்பமாகிறது

B. A. Part – i
[யாழ். பல்கலைக்கழகம் - வெளிவாரி]

– நிர்வாகி
பட்டப்படிப்பகம்.

[70193]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தோனேசியக் கடலில் பயணிகள் கப்பல் மூழ்கியது

## 200 பேர் வரை உயிரிழப்பு

ஜகார்த்தா, ஒக். 22

இந்தோனேசிய கடற்பரப்பில் சென்று கொண்டிருந்த பயணிகள் கப்பல் ஒன்று கடலில் மூழ்கியதில் சுமார் 200 பேரைக் காணவில்லை என்று அறிவிக்கப்படுகிறது. இவர்களில் பலர் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

ஷியா மாநிலத்தின் கரையோரமாகச் சென்று கொண்டிருந்த இந்தக் கப்பலில் 300 பேர் வரை பயணம் செய்து கொண்டிருந்தனர். கடந்த திங்கட்கிழமை நண்பகல் அளவில் கப்பல் திடீரென மூழ்க ஆரம்பித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீட்புப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நேற்று வரை இடம் பெற்ற மீட்புப் பணிகளில் 26 பேர் மட்டுமே உயிருடன் மீட்கப்பட்டதாக கப்பல் நிறுவனம் அறிவித்துள்ளது.

ஏனையோரை மீட்கும்பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. எனினும் காணாமற்போனவர்கள் உயிருடன் இருப்பதற்கான சாத்தியங்கள் மிகக் குறைவு என மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

கப்பல் மூழ்குவதற்கு முன்னர் கப்பல் ஆபத்தில் இருப்பதாக கப்டனிடம் இருந்து றேடியோ சமிக்ஞைகள் கிடைத்ததாகவும்—

பின்னர் கப்பலுடனான தொடர்பு இழக்கப்பட்டு விட்டதாகவும்—

கப்பல் நிறுவனம் தெரிவித்தது.

(ஐ-6-9)

# இந்தோனேசிய தலைநகரில் மேகவதி ஆதரவாளர் வன்முறை

இந்தோனேசிய ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவி மேகவதி சுகர்ணபுத்ரி தோல்வி அடைந்ததை அடுத்து அவரது ஆதரவாளர்கள் தலைநகர் ஜகார்த்தா எங்கும் பெரும் வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

உலக அரங்கில்

ஜகார்த்தா வீதி ஒன்றில் நேற்று இடம்பெற்ற கார்க் குண்டு வெடிப்பில் இருவர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற கார்க் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் சுமார் 20 பேர்வரை காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஜகார்த்தாவில் காவலுக்கு நிறுத்தப்பட்டுள்ள இராணுவம் மற்றும் பொலீஸாருடனும் ஆர்ப்பாட்டக்காரர்கள் மோதி வருகின்றனர். ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்குவதற்கென மேலதிக இராணுவ பொலீஸ் படைகள் ஜகார்த்தாவுக்கு அழைக்கப்பட்டுள்ளன.

அதேசமயம் வன்முறைகள் நாட்டின் பல பகுதிகளுக்கும் பரவிவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)

# பின்லேடனை ஒப்படைப்பது இஸ்லாத்துக்கு முரணானது

## தலிபான் அமைப்பு அறிவிப்பு

காபூல், ஒக். 22

ஒஸாமா பின்லேடனை அமெரிக்காவிடம் ஒப்படைப்பது இஸ்லாமியக் கொள்கைகளுக்கு எதிராக நம்பிக்கைத் துரோகம் செய்வது போலாகும் என தலிபான் இயக்கம் தெரிவித்துள்ளது.

அண்மையில் நடந்து முடிந்த ஐ. நா பாதுகாப்புச் சபைக்கூட்டத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் தலிபான் இயக்கம் ஒஸாமா பின்லேடனை அமெரிக்காவிடம் ஒப்படைக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

பின்லேடன் ஒப்படைக்கப்படாவிட்டால் ஆப்கானிஸ்தான் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படும் எனவும் ஐ. நா. பாதுகாப்புச் சபை தெரிவித்திருந்தது.

எனினும் ஐ. நா வின் மிரட்டல்களுக்குப் பயந்து பின்லேடனை ஒப்படைக்கப் போவதில்லை எனத் தெரிவித்துள்ள தலிபான்கள் அவ்வாறு ஒப்படைப்பது இஸ்லாமியக் கொள்கைகளுக்கு எதிராகச் செய்யப்படும் நம்பிக்கைத்துரோகம் ஆகும் எனவும் தெரிவித்துள்ளது.

(ஐ-6)

# டீசல் விலை உயர்வை எதிர்த்து இந்தியாவில் 22 லட்சம் லொறிகள் நேற்று வேலை நிறுத்தத்தால் தரிப்பு!

புதுடில்லி ஒக். 22

இந்திய மத்திய அரசாங்கம் டீசலின் விலையை அதிகரித்ததை எதிர்த்து இந்தியா முழுவதும் உள்ள சுமார் 22 லட்சம் லொறி உரிமையாளர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

பால், குடிதண்ணீர், பத்திரிகை ஆகியவற்றை எடுத்துச் செல்லும் லொறிகளுக்கு மட்டும் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இந்திய நாடாளுமன்றத் தேர்தல்கள் முடிவடைந்த காலப்பகுதியில் அப்போது காபந்து அரசாகப் பதவி வகித்த பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான அரசு டீசலின் விலையை 28 சதவீதத்தால் அதிகரித்தது.

இந்த விலை அதிகரிப்பால் தமக்கு ஏற்படும் செலவு மேலும் அதிகரிக்கும் அதேவேளை அதற்கு ஈடுகொடுக்கும் வகையில் வருமானம் ஈட்ட முடியாது எனத் தெரிவித்து லொறி உரிமையாளர்கள் இந்த வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

இந்தியாவின் முக்கிய நகரங்கள் உட்பட அனைத்துப் பகுதிகளுக்குமே அத்தியாவசிய பொருள்களை எடுத்துச் செல்வதில் மிகப் பெரும் பங்கு வகிப்பவை லொறிகள். தற்போதைய இந்த வேலை நிறுத்தத்தால் நாட்டின் இயல்பு நிலை பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

உலகளவில் மசகு எண்ணெய், டீசல் ஆகியவற்றின் விலைகள் அதிகரித்துள்ளதால் விலை ஏற்றம் தவிர்க்க முடியாதது என இந்திய அரசு தெரிவித்துள்ளது. இந்த விலை உயர்வுக்குப் பின்னரும் பட்ஜெட்டில் எண்ணெய்க்கான ஒதுக்கீட்டில் 3 ஆயிரத்து 400 கோடி ரூபா துண்டு விழுகிறது என்றும் இந்திய அரசு கூறியுள்ளது.

அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் உயராமல் இருப்பதற்காக அவசிய சேவைகள் பராமரிப்புச் சட்டத்தை அமுல்படுத்துவது உட்பட எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு மத்திய அரசு மாநில அரசுகளை அறிவுறுத்தி உள்ளது.

(6)

# கட்டடத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நிர்மாணவேலைகள்

மாகாணக் கட்டடத் திணைக்களத்தினால் பல அரசகட்டடங்கள் தற்பொழுது நிர்மாணிக்கப்பட்டு வருவதாக திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

சுகாதாரத் திணைக்களத்தில் மாகாணப்பிரதிப் பணிப்பாளர் அலுவலக வேலைகள் 60 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையின் நிர்வாகப் பகுதிக் கட்டடத்திற்கு ஒன்றரைக் கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன் கட்டட வேலைகள் விரைவில் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

வல்வெட்டித்துறை நகரசபையின் கீழ்த்தளம் 15 லட்சம் ரூபா செலவில் அண்மையில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

மேல் தள வேலைகள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நெல்லியடிச் சந்தையின் முதற் கட்ட வேலைகள் முடிவடைந்துள்ள நிலையில் மேல்தளமும்கூரையும் அமைக்கப்படவுள்ளன.

மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை புனரமைப்புச்செய்யப்பட்டுள்ளது. வைத்திய அதிகாரி விடுதி அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பளை, மந்திகை, வல்வெட்டித்துறை, காரைநகர் வைத்தியசாலைகளில் அம்புலன்ஸ்வண்டிக்கான தரிப்பு நிலையங்கள் 20 லட்சம்ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

கைதடியில் 20 லட்சம் ரூபா செலவில் அரச அநாதை இல்லம் ஒன்று அமைக்கப்பட்டு வருவதுடன் சங்கானை, அச்சுவேலி ஆஸ்பத்திரிகளின் பிரசவ விடுதிகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்தக் கட்டட நிர்மாண வேலைகள் அனைத்தும் இவ்வருட இறுதிக்குள் முடிவடைந்து விடும் என்றும் கட்டடத் திணைக்கள அதிகாரி தெரிவித்தார். [ஐ-5]

# உலக உயிர் பாதுகாப்பு வாரம்

திருநெல்வேலி, ஒக். 22

உலக உயிர் பாதுகாப்பு வாரம் அடுத்த மாதம் எட்டாம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு திருவள்ளுவரின் கொல்லாமை, புலால் மறுத்தல் வழியில் நின்று எல்லா உயிர்களின் மீதும் அன்பு செலுத்தி வாழ முற்பட வேண்டும். என்று யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

உலக அமைதியும், சமாதானமும். சகோதரத்துவமும் நிலவ தாவர உணவை உட்கொள்ளும் காலமாகவும் விரத காலமாகவும் இவ்வாரத்தை அனுஷ்டித்து பிரார்த்தனையில் ஈடுபட வேண்டும் என்றும் அதில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

# ஐ. நா. அபிவிருத்தித்திட்டம் காரைநகரில் கடன் உதவி

காரைநகர், ஒக். 22

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்ட நிதி உதவியின் கீழ் காரைநகர் பலநோ. கூ. சங்க கிராமிய வங்கி ஊடாக சுயதொழில் ஊக்குவிப்புக்கடனாக 42 பயனாளிகளுக்கு சுமார் ஐந்து லட்சத்து 70 ஆயிரம்ரூபா முதற்கட்டமாக வழங்கப்பட்டுள்ளது.

காரைநகரில் வியாபாரம், எள் எண்ணெய் உற்பத்தி, நெற்செய்கை, கால்நடை வளர்ப்பு, தையல் போன்ற தொழில்களில் ஈடுபடும் 34 பேருக்கு தலா 15 ஆயிரம் ரூபா வீதமும் 8பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதமும் கடன் வழங்கப்பட்டுள்ளது-

அடுத்த கட்டமாக 38 பேருக்கு 4 லட்சத்து 30 ஆயிரம் ரூபா மிக விரைவில் கடனாக வழங்கப்படவுள்ளது.

(ஐ-73)

# மழையை அடுத்து தீவுப் பகுதிகளில் பயிர்ச் செய்கைகள் ஆரம்பம்

நெடுந்தீவு, ஒக். 22

நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ளவிவசாயிகள் தற்போது பெய்துள்ள மழையைத் தொடர்ந்து விவசாய நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

நெடுந்தீவு மேற்குப் பகுதியில் உப உணவுப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. வேலணை, ஊர்காவற்றுறைப்பகுதிகளில் தோட்டப் பயிர்களுடன் நெல் உற்பத்தியிலும் விவசாயிகள் கவனஞ் செலுத்துகின்றனர். அநேக வயல் நிலங்களில் உழவு வேலைகள் இடம் பெற்று வருகின்றன.

(ஐ-111)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

உடுவில் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த நிர்வாக உத்தியோகத்தரான

**திரு. S. R. ஜெயப்பிரகாசம்**

அவர்களும்

ஓய்வுபெற்ற பதவிநிலை உத்தியோகத்தரான

**திரு. V. தெய்வேந்திரன்**

அவர்களும் யாழ். மாவட்ட சமாதான நீதிவான்களாகத் தெரிவு செய்யப்பட்டதை மனதாரப் பாராட்டுகின்றோம்.

சமுர்த்தி உத்தியோகத்தர்கள்,
உடுவில் பிரதேச செயலகம்.

(70215)



## BEACON

Vathiry, Karaveddy-

99 A/L

மீட்டல் வகுப்புகள்

ஆரம்பம்: 23-10-99 சனி

தூய/பிர. கணிதம் 9.30 மணி
திரு. அருளானந்தம்

இரசாயனவியல் - 11.30மணி
திரு. க. சண்முகசுந்தரம்

பௌதிகவியல் - 1.00 மணி
திரு. சம்பந்தன்

தாவரவியல்
திரு. குணசீலன்

விலங்கியல்
திரு. தம்பிராசா

(70186)



## சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம்

எதிர்வரும் 23 - 10 - 99 சனிக்கிழமை மேற்படி தினத்தினை யாழ். லயன்ஸ்கழகம் ஊர்வலம் மற்றும் பொதுக் கூட்டத்துடன் கொண்டாடவுள்ளது. ஊர்வலம் காலை 9.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியிலிருந்து ஆரம்பமாகும். சகல லயன்ஸ் கழக மற்றும் லியோக்கழக உறுப்பினர்கள் நலன் விரும்பிகள் அனைவரையும் இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தலைவர்,
யாழ். லயன்ஸ் கழகம்.

(சி/ 9454)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### கைமாறிவிட்டது

18-10-99 திங்கட்கிழமை யாழ். ஸ்ரான்லி வீதியில் ஆண்களுக்கான சைக்கிள் ஒன்று தவறுதலாக கைமாறி எடுத்துச்செல்லப்பட்டுவிட்டது. கைமாறி எடுத்தவர்கள் தயவுசெய்து யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள Jaffna Technical Institute உடன் தொடர்புகொள்ளவும்.

[70187]

### பிறிமா குஞ்சுகள்

அளவான தீவனத்துடன் நீண்ட காலத்துக்குமிக அதிகமான முட்டை இடும் முழு இலங்கையிலும் பண்ணையாளர்களின் நம்பிக்கையைப் பெற்ற Prima 'Quality Chicks' இன் 3 நாள் நன்கு வளர்ச்சியடைந்த Hi - Line சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு வை.சிவகுமார், நாவலர் வீதி, அத்தியடி, (அரவிந் வீடியோ அருகில்) யாழ்ப்பாணம்.

(70147)

### வீடு தேவை

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவருக்கு சகல வசதிகளும் கொண்ட வீடு நல்லூர் பிரதேசத்தில் வாடகைக்குத் தேவை. வாடகை முற்பணம் பேசித் தீர்மானிச்கலாம் தொடர்பு: No 64, 2 ஆம் குறுக்கு வீதி, நல்லூர்.

(70152)

### தவறிவிட்டது

செல்வி திரிலோஜினி சிவசுப்பிரமணியம் ஆகிய எனது தேசிய, விசேட அடையாள அட்டையுடன்[686971473V] சிலநூமூக்கிய ஆவணங்களும் 15-10-99 அன்று தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து M மாணிக்கம் [இந்து மகா வித்தியாலயம் அருகில்] புகையிரத நிலைய வீதி, கோண்டாவில் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

[70181]

### தவறிவிட்டது

இராசரத்தினம் பரேதன் என்பவரது தேசிய அடையாள அட்டை 781190942V, விசேட அடையாள அட்டை இரண்டும் அச்சுவேலிக்கும் புன்னாலைக் கட்டுவனுக்கும் இடையில் தவறி விட்டன, கண்டெடுத்தவர்கள் மீழ்க் காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். ரட்ணம்ஸ் பாட்டா, 49, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T. P. 021 - 2917, நாகமிஸ் சினிமா, சுன்னாகம்.

[70194]

சிவகௌரி சுப்பிரமணியம் ஆகிய எனது தேசிய அ. அட்டை [இல. 795702717V] 15-10-99 இல் யாழ். பருத்தித்துறை C.T.B. பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பிரதான வீதி புலோலி மேற்கு, பருத்தித்துறைஎன்ற விலாசத்தில் ஒப்படைத்துதவவும்.

[70198]

யோசப் நிற்றம்மா ஆகிய எனது தேசிய அடையாள அட்டையும் [467152939] விசேட அடையாள அட்டையும் யாழ்ப்பாணத்துக்கும் பண்டத்தரிப்புக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் இறையியலகம் அமல உற்பவம் கொழும்புத்துறை என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும். T.P. No. 2848

[70185]

19-10-99, கடந்த செவ்வாய்க்கிழமை பி. ப. 4-4 30 க்கும் இடையில் நாவலர் வீதி-வைமன் வீதிச்சந்தியில் இருந்து தபாற் கட்டைச் சந்திக்கும்இடையில் பிறௌன் நிற தோலாலான ''மணிப் பேர்ஸ்'' ஒன்று பணத்துடன் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு கூர்ந்து கீழ் வரும் முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். க.பாலசுப்பிரமணியம், கூட்டுறவு அலுவலகம், 18/10, வைமன் வீதி, யாழ்ப்பாணம்.

[70160]

### ஸ்கூட்டர் விற்பனை

எனது சொந்தப் பாவனையிலுள்ள Bajaj Scooter விற்பனைக்கு உண்டு தொடர்புகளுக்கு M. Vimalanathan, 16/12, Vitnanayar lene, Chundikuli Jaffna.

[70165]

### புறொயிலர்

இறைச்சிக்கோழி (Broiler விற்பனைக்குண்டு. 1Kg 100/- சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்கள் மட்டும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: கல்லூரி ஒழுங்கை, வட்டுக்கோட்டை.

[70174]

### காணி விற்பனைக்கு

சங்கத்தானை இத்தி டிப்பிள்ளையார்ஆலயத்திற்கு அண்மையில், பயன்தருமரங்கள் உள்ள மூன்று பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:19, தாமோதரம் பிள்ளை வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.

(70177)

### இலகு திருமணசேவை

1970 அவிட்டம் செவ்வாய்ற கிரகபாவம் கூடிய படித்த மணப்பெண்ணுக்கு மணமகன் அரச / தனியார் துறையில் தேவை. சீதனம் உண்டு. மணமக்கள் தேர்வுக்கு நாடுங்கள் ஞாயிறு களில் துரைவிமலா K.K வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

(70078)

### விற்பனைக்கு

பாக்கர் கிறசர் 14''×7'' லிஸ்ரர் என்ஜின் jK மொடல் எயர் கொண்டிசனர் Fredrich IKVAதொடர்பு: 312,கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P. 3090

(70162)

நல்ல நிலையில் உள்ள இரண்டு ஸ்கூட்டர்கள் (L.ML Vaspa,112- 1674,112-1673) புதுப்பிக்கப்பட்டு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வி.பி. சிவநாதன் இல. 106, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(சி/9442)

800 வீடியோ பிரதிகள் (பழைய புதிய தமிழ் திரைப் படங்கள்) உடன் விற்பனைக்கு. விவரங்களுக்கு: 43, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

(70141)


சுன்னாகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள முகவர் தபாலகத்திற்கு

## தபாலதிபர் தேவை

க. பொ. த. (சா/த) தமிழ், கணிதம் விசேட சித்தியுடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
ஆங்கில ரைப்பிங் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை
சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
ஓய்வு பெற்ற தபாலதிபர்களும் விண்ணப்பிக்கலாம்.

விவரங்களுக்கு: விளம்பர முகவர்:

**துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ்**

பஸ்நிலையம் முன்பாக, சுன்னாகம்.

(சி/9449)



## புதிய வகுப்பு ஆரம்பம்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் நடத்தும்
மனையியற் பயிற்சி வகுப்பு

தையல், சமையற்பாகம், மணமகள் அலங்காரம், பற்றிக் பெயின்ரிங், மாச்சினி மலர் அலங்காரம் மற்றும் பல பாடங்கள்

24 – 10 – 1999 ஞாயிற்றுக்கிழமை
காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

மேலாளர்.

(70204)



## கணக்காளர் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு கடைக்கணக்கு எழுதுவதில் அனுபவம் உள்ள கணக்காளர் மற்றும் பில் கிளாக் உடன் தேவை

தொடர்புகளுக்கு:
EDNA DISTRIBUTORS
KURINCHI PHARMACY
558, HOSPITAL ROAD, JAFFNA.
T. P. 3191

(70192)



## யா/ஹாட்லிக் கல்லூரி

பருத்தித்துறை

## தரம் 6 அனுமதி- 2000

மேற்படி அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்களை
1999 – 10 – 25 தொடக்கம்
கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 1999 - 11 - 19

யா/ஹாட்லிக் கல்லூரி, – அதிபர்.
பருத்தித்துறை.

(70210)



## SCIENCE COLLEGE

யாழ்ப்பாணம்.

வினா விடை வகுப்பு
[ 99 A/L பரீட்சைக்கு தோற்றியவர்க்கு ]
இரசாயனவியல்
ORGANIC

திரு. மகேஸ்வரன் B. Sc.
ஆரம்பம்: 23 - 10 - 99
சனி, ஞாயிறு 9.00

[70211]



# திருமண அழைப்பு

♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் ஐப்பசி மாதம் 8 ஆம் நாள் (25-10-99) திங்கட்கிழமை பகல் 9.00 மணிமுதல் 9.30 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்,

திருநிறை செல்வன்
**இரங்கநாதன்**
B. B. A [Hons]
அவர்களுக்கும்



திருநிறை செல்வி
**விஜயகுமாரி**
B. Com [Hons]
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு பருத்தித்துறை புலோலி சிவன் பசுபதீஸ்வரர் ஆலயத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து, அதைத் தொடர்ந்து மணமகன் இல்லத்தில் நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திருமதி புவனேஸ்வரி சின்னத்தம்பி,
''சின்னத்தம்பி வளவு''
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

திரு. திருமதி இராஜதுரை,
(ராஜன் சைக்கிள் வேக்ஸ்)
ராஜன் வீடியோ மூவீஸ் சென்ரர்
ராஜன் தொலைத் தொடர்பு சேவை
மஹாலக்சுமி பல்பொருள் விற்பனை நிலையம்
வல்லிபுரப் பரியாரியார் ஒழுங்கை,
பருத்தித்துறை.

(70209)

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

காலஞ்சென்ற பேராசிரியர்
கா. கைலாசநாதக் குருக்கள்,
அவர்களின் தர்மபத்தினி
**அமரர் திரிபுரசுந்தரி அம்மாள்**
அவர்களின்

ஆத்மசாந்திப் பிரார்த்தனை, நினைவுக் கூட்டம், சாமாராதனை என்பன நல்லூர் சிவன் கோவிலில் 1999 – 10 – 24 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். யாவரும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பிரார்த்தனை காலை 8 மணி
நினைவுக்கூட்டம் காலை 10 மணி
சாமாராதனை மதியம் 12 மணி

பிரம்மஸ்ரீ
ஸ்ரீ கிருஷ்ணானந்த சர்மா,
ப. சர்வேஸ்வர சர்மா.

செயலாளர்,
நிவந்தர்

(சி/9447)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்னிக்கு அனுப்பிய அ. அட்டைகள்

# மீண்டும் யாழ். திரும்பி வந்தன

நவாலி, ஒக். 22

யாழ். ஆள்பதிவுத் திணைக்களத்தினால் வன்னி முகவரியிடப்பட்டு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வன்னியில் வசிப்பவர்களுக்குஎன அனுப்பி வைக்கப்பட்ட ஒரு தொகுதி அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படாது திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த 94 ஆம், 95 ஆம், 96 ஆம் ஆண்டுகளில் தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பம் செய்துவிட்டு இராணுவநடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து தற்போது வன்னியில் இருப்பவர்கள் தமது தற்போதைய முகவரியைத்தெரிவித்து அந்த முகவரிக்கு தமது அடையாள அட்டைகளைஅனுப்பிவைக்குமாறு யாழ். ஆள்பதிவுத் திணைக்களத்திடம் கோரியிருந்தனர்.

இதன் பிரகாரம் அண்மையில் இந்தத் திணைக்களத்துக்குப் புதிதாக வந்து சேர்ந்த அடையாள அட்டைகளில் ஒரு தொகுதி வன்னியிலுள்ள முகவரிகளுக்குத் தனித்தனியாக அனுப்பி வைக்கப்பட்டன.

அவை உடைத்துப் பார்க்கப்பட்ட பின்னர் மீண்டும் திருப்பி ஒட்டப்பட்டுத் தபாலுறையின் மேற்பக்கத்தில் சிவப்பு மையினால் 'பொலீஸ் செக்' எனக் குறிப்பிடப்பட்டு இந்தத் திணைக்களத்துக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. [இ-100]

## பயிலமர்வு

யாழ். வலயப் பாடசாலைகளில் சித்திர பாடம் கற்பிக்கும் வேறு துறைசார்ந்த ஆசிரியர்களுக்கான சித்திரப் பாடப் பயிலமர்வு இன்று வெள்ளிக்கிழமை முதல் தொடர்ந்து ஐந்து தினங்களுக்கு யாழ். இந்துக் கல்லூரியில் காலை 8.30மணிக்கு நடைபெறும்.

சித்திரப்பாட ஆசிரியர் பற்றாக்குறையால் ஏற்பட்டுள்ள பின்னடைவை நீக்குமுகமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இப்பயிலமர்வில் கலந்து கொள்வோர் சித்திரப் பயிற்சிக்குத் தேவையான வரைதல் உபகரணங்களுடன் வருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (இ-69)

## ஏற்புவலியால் மரணம்

ஏற்புவலி நோயின் பாதிப்பிற்குள்ளாகி கடந்த 14 ஆம் திகதி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் 6 நாள்களின் பின் நேற்று முன்தினம் மரணமானார்.

அளவெட்டி அலுக்கையைச் சேர்ந்த சின்னத்துரை ஸ்ரீகாந்தா (வயது 4) என்பவரே மரணமானவராவார். (ம-15)

## வாழ்த்துகின்றோம்

எமது மன்றத்தின் அறநெறிப் பணிகளுக்கு
உந்துசக்தியாக விளங்கியவரும்,
சிறந்த சமூக சேவகருமாகிய

**உயர்திரு கூ. திருவிளங்கம்**

அவர்கள் சமாதான நீதிவானாக
நியமனம் பெற்றதை வாழ்த்தி மகிழ்கின்றோம்.
அவரது சேவைகள் மேன்மேலும்
சிறப்புற்று விளங்க எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம் !

செயலாளர்

இந்து மாமன்றம்,
அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

[70130]

## பிறந்தநாள் வாழ்த்து

**திரு. அ. யோகதாஸ்**
(H. N. B – Jaffna)

முன்னாள் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக
அணித் தலைவரும்
இக்கழகத்தின் தற்போதைய விளையாட்டு வீரனும்
யாழ் ஹற்றன் நஷனல் வங்கி ஊழியருமான

திரு. அ. யோகதாஸ்

அவர்கள் தனது 26 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடும் இந்நாளில் அவர் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

– நண்பர்கள்

[சி/9435]

KOBE KOBE KOBE KOBE KOBE

பணத்தை திருப்பி பெறும் உத்தரவாதம்
நம். 1
இலங்கையில் அதிகளவு விற்பனை
KOBE
UHF/VHF கலர் T.V பூஸ்டர்

• இலங்கை T.V சனல்களுக்கு ஏற்ப விசேடமாக வடிவமைக்கப்பட்டவை.
• வெவ்வேறு இடங்களுக்கு ஏற்றவாறு பொருத்தக்கூடிய 14 மாதிரிகள்
• விற்பனையின் பின்னர் சிறந்த விரைவான திருத்த சேவை

KOBE UHF அன்டனாக்கள் எல்லா UHF சனல்களுக்கும்
VHF அன்டனாக்கள் ரூபவாகினி, ITN சனல்களுக்கு

பூஸ்டர்கள்
சகல சனல்களிலும் பூரணத்துவமான படங்களுக்கு தனியான
அன்டனாக்கள் பல பிரதேசங்களுக்கு சிபாரிசு
செய்யப்பட்டுள்ளது. நாடுகள் பூராவும் பெற்றுக்கொள்ளப்படும்

விசேடமாக UHF / VHF பூஸ்டர்கள்
2 UHF IN PUT 2 VHF INPUT
ONE OUTPUT

அன்டனா நிபுணர்கள்:
LANKA NIPPON ANTENNA PVT LTD.
18, Keyzer Street, Colombo 11.
Tel: 324726, 437735, Fax: 437736

Finally it is KOBE you will settle for ........!
must be KOBE ...... the Original
" நிப்பொனின் " சகோதர நிறுவனம்

KOBE KOBE KOBE KOBE KOBE

## நுளம்புவலை விநியோகம்

யாழ் மாவட்டத்தில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுக்கு இரண்டாயிரம் நுளம்பு வலைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

யாழ் செயலகத்தின் உதவியுடன் சுகாதாரத் திணைக்கள மாகாணப்பிரதிப் பணிப்பாளர் (யாழ் ) அலுவலகத்துக்கு இந்த வலைகள் வழங்கப்பட்டன.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குழந்தை பிரசவித்த தாய்மாருக்கு இந்த வலைகள் வழங்கப்படவேண்டும் என்ற பணிப்புடன் சுகாதாரத் திணைக்களத்தினால் வைத்திய அதிகாரிகள் பிரிவுக்கு இந்த வலைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ரீதியாக இந்த நுளம்புவலைகளை விநியோகிக்கும் வேலைகள் தற்பொழுது இடம்பெற்றுவருகின்றன. [இ-5]

## கலப்பட நல்லெண்ணெய் பறிமுதல்

சுதுமலை, ஆனைக்கோட்டைப் பகுதியிலுள்ள சில வர்த்தக நிலையங்களில் கலப்படம் செய்த நல்லெண்ணெய் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் மேற்படி வர்த்தக நிலையங்களை திடீர் பரிசோதனை செய்த ஆனைக்கோட்டை பொதுச் சுகாதார பரிசோதகர் வை. தயாமோகன் கலப்பட நல்லெண்ணெயை பறிமுதல் செய்தார். (ஐ-100)

**அச்சக உரிமையாளர் கவனத்துக்கு!**

பிறிசிம் மை வகைகள்
(Prism Printing Ink)

அச்சகத்திற்குத் தேவையான பிறிசிம், சகல கலர் மை வகைகள் எம்மிடம் விற்பனைக்குண்டு.

**தயா அச்சகம்**
138, நாவலர் றோட் (மனோகரா சந்தி அருகில்),
யாழ்ப்பாணம். தொலைபேசி 2881
(70184)

**கோபிகா** தொலைத்தொடர்புச் சேவை
Kopika Communication Service

உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகளை துரித கெதியில் பெற்றுக்கொள்ளலாம்.

உள்ளூர் தொலைபேசி இல: 070 – 21 2549
வெளியூர் தொலைபேசி இல: 0094 – 70 21 2549

4 ஆவது மைல்கல், இராஜவீதி,
நீர்வேலி.
[70173]

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம
**உடுப்பிட்டியில்**
**புதிய தொலைத் தொடர்பகம்**

குறைந்த கட்டணம்! நிறைவான சேவை!!
இரவு பகல் சேவை!!!

- உள்ளூர் (Local) அழைப்பு நிமிடத்திற்கு 6 ரூபா
- உள்வருகை (Incoming) அழைப்பு நிமிடத்திற்கு 4 ரூபா
- குறைந்த கட்டணத்தில் வெளிநாட்டுத் தொடர்பு
- ஞாயிறு பொது விடுமுறை தினங்களில் சலுகைக் கட்டணம்

தொலைபேசி இல.
உள்ளூர் 070 – 212640
வெளியூர் 0094 – 70 – 212640

"ANANTH" TELECOMMUNICATION
"ஆனந்" தொலைத்தொடர்பு நிலையம்
"சிவனடிவாசா", சந்தை வீதி,
உடுப்பிட்டி. (70178)

## கொக்குவில் இந்துக் கல்லூரி
## பரிசளிப்பு விழா - 1999

காலம்: 23-10-1999 சனிக்கிழமை மு. ப. 9.30 மணி

இடம்: கல்லூரி பிரதான மண்டபம்

தலைவர்: திரு. பொ. கமலநாதன் (அதிபர்)

பிரதம விருந்தினர்:

திரு. இராசரட்ணம் நடராஜா
(பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை)

கௌரவ விருந்தினர்:

திருமதி சத்தியலெட்சுமி காங்கேயன்
(உதவிக் கல்விப் பணிப்பாளர், நல்லூர் கல்விக் கோட்டம்)

பெற்றோர், பழையமாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்

[சி/9440]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A/L 2000
## DAY & REVISION

கலைப்பிரிவு வகுப்புகள்!

**BEACON**

(வெலிங்டன் சந்திக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

எமது ஆசிரியர் குழு:

| | | |
|---|---|---|
| தமிழ் | — | Beacon ஆசிரியை |
| இந்துநாகரிகம் | — | திரு. ஜோதீஸ்வரன் |
| அளவையியல் | — | திரு. S. S. மனோகரன் |
| நாடகம் | — | திரு. நிஷாந்தன் |
| கிறிஸ்தவம் | — | திருமதி S. சுனித்தா |
| புவியியல் | — | திரு. ஞானேஸ்வரன் |
| அரசியல் | — | திரு. கேதீஸ்வரன் |

**ஆரம்பம்: 24-10-99 காலை 8.00 மணி**
[70197]



வடக்கு – கிழக்கு மாகாண பொதுச்சேவைக்கு
குடியேற்ற உத்தியோகத்தர் வகுப்பு 11 'ஆ' பதவிக்கு

## ஆட்சேர்ப்பு திருத்த விளம்பரம்

1999 – 10 – 11ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மேற்படி பதவிக்கான ஆட்சேர்ப்பு விளம்பரத்தின் மாதிரி விண்ணப்பப் படிவத்தின் 11 ஆம் நிரல் தொடக்கம் 15 ஆம் நிரல் வரை தவற விடப் பட்டுள்ளது. அவை கீழே தரப்படுகின்றன.

11 ...............)
12 ...............)
13 ...............)
14 ...............) இணைக்கப்பட்டுள்ளது.
15 ...............)

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவத்தை தயாரிக்கும் போது 11 — 15 வரையான நிரல்களை தங்கள் விண்ணபத்தில் உள்ளடக்கிக் கொள்ள வேண்டும்.

க. பரமேஸ்வரன்
செயலாளர்,
பா. பொ. சே. ஆ.

11. 1) நீங்கள் நிரந்தரமாக வதியும் மாவட்டம்:
2) பிரதேச செயலாளர் பிரிவு:
3) வதியும் கால எல்லை: தொடக்கம் வரை
4) வடக்கு—கிழக்கு மாகாணத்திலிருந்து தற்காலிகமாக இடம்பெயர்ந்து இருப்பின் தங்கள் நிரந்தர வதிவு மாவட்டம்:
5) தற்காலிகமாக இடம்பெயர்ந்து வதியும் மாவட்டம்:............... மாகாணம்: ............
இடம்பெயர்ந்த ஆண்டு; ...................
மாதம்: ........... திகதி: ............

12. தொழில்நுட்ப தகைமைகள்:
1) பெற்றுள்ள டிப்ளோமாச் சான்றிதழ்களின் பெயர்:
2) அச்சான்றிதழை வழங்கிய நிறுவனத்தின் பெயர்:
3) டிப்ளோமா சான்றிதழ் நடைமுறைக்கு வரும் திகதி:

13. பணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும்.

14. இந்த விண்ணபத்தில் என்னால் தரப்பட்டுள்ள விவரங்கள் யாவும் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானவை என்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட ......................... பிரதேச செயலகத்தின் ......................... ஆம் இலக்க ................. ஆந் திகதிய பற்றுச் சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது என்றும் இப் பரீட்சை விதிகளுக்கு அமைந்தொழுகி நடப்பதற்கும் சம்மதிக்கிறேன். மேலும் இப் பரீட்சை நிபந்தனைகளின்படி நான் தகுதியற்றவரெனக் கண்டு பிடிக்கப்பட்டால் பரீட்சையின் முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சார்த்த தன்மையை இரத்துச் செய்வதற்கு எடுக்கும் முடிவுகளை ஏற்றுக் கொள்வதற்கும் எனது இணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

......................... ..........
திகதி:- விண்ணப்பதாரியின் கையொப்பம்

15. விண்ணப்பப் பத்திரத்திலுள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை அதிபர். சமாதான நீதிவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, படை தாங்கு சேவையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது வருடாந்த திரட்டிய வேதனமாக ரூபக 74, 160/-ற்கு மேற்பட்ட சம்பளத்தை உடைய அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஆகிய ஒருவரால் சான்றுபடுத்தப்பட வேண்டும்.

(சி/9443)


## கூட்டம்

தென்மராட்சி பிரதேச திட்டமிடல் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறும்.

இக்கூட்டத்தில் பாடசாலை அபிவிருத்தி வேலைகளை முன்னுரிமைப்படுத்தல். பிரதேச அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் பற்றி கலந்துரையாடப்பட உள்ளது.

(ஐ-133)

## ஊர்காவலர் தாக்குதலில் பலி

மட்டக்களப்பு — பொலன்நறுவ எல்லைப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஊர்காவற் படை வீரர் ஒருவர் நேற்றுக் முன்தினம்கொல்லப்பட்டார்.

மெதிரிகிரிய பொலீஸ் நிலையத்தில் இருந்து காலை 7-30 மணியளவில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலீஸார் மற்றும் ஊர்காவற் படை அணி மீது குடாப்பொத்தனையில் வைத்து புலிகள் தாக்குதல் நடத்தியபோதே இவர் கொல்லப்பட்டார்.

(இ-8)


யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை

## நினைவு கூருதல் தினம்

எதிர்வரும் 1999-10-25ம் திகதி காலை 9.30மணிக்கு மேற்படி தினம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

கடந்த 25 வருடங்களில் எம்முடனிருந்த இப் பல்கலைக்கழகத்தில் சேவையாற்றியோர் மற்றும் கல்விகற்றோரில் இறையடி சேர்ந்தோரின் உற்றார், உறவினர்களை இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

பதிவாளர்

(சி/9444)



உ
மூளாய் வதிரன்புலோ
## சித்திவிநாயகர் தேவஸ்தானம்
# பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

சித்திவிநாயக அடியார்களே!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருஷம் ஐப்பசி மாதம்
**25 - 10 - 99 திங்கட்கிழமை**
அச்சுவினி நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் காலை 6.02மணி முதல் 7.30 மணி வரை வரும் துலாலக்கின சுபமுகூர்த்தத்தில்
பாலஸ்தாபன கும்பாபிஷேகம்
நடைபெற திருவருள் பாலித்துள்ளது.

**முதல் நாள் 24 – 10 – 99 ஞாயிற்றுக்கிழமை**
காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகி பூர்வாங்க கிரியைகள் தொடர்ந்து நடைபெற இருப்பதால் அடியார்கள் யாவரும் வருகை தந்து சித்திவிநாயகரின் திருவருளை யாசிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

நிதி உதவும் அன்பர்கள் தேவஸ்தான பரிபாலன சபை பொருளாளரிடமோ அல்லது

கணக்கு இல. S/A. 24087, இலங்கை வங்கி,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
வங்கிக் கணக்குக்கோ அனுப்பலாம்,
நன்றி!
"சித்திவினாயகர் கருணை மகத்தானது"

– பரிபாலன சபை

[70189]



## நீங்காத நினைவில் ஏழாண்டுகள்

தோற்றம்
02
—
01
—
1935



மறைவு
22
—
10
—
1992

## ராணி பாலசிங்கம்
(மம்மி)

இன்புற்றார் எய்தும் சிறப்பெய்தி விண்புகுந்தாய்
அன்புற்றமாந்தர் வழக்கிதனால் அயலவர்கள்
நன்றுற்றார் மனங்களிலும் நல்லொளியாய்
நிலைத்திட்டாய். விம்மி விழி சுரந்து
வேதனையால் வேகின்றோம்.
மம்மி மகிழ்ந்திருப்போம் மறு உருவில் வாராயோ?

குடும்பத்தினர்.

இல. 3, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

(70203)



வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்
2000 ஆம் ஆண்டுக்கான
# கேள்வி அறிவித்தல்

01—01—2000 தொடக்கம் 31 –12—2000 வரையிலான காலப் பகுதிக்குள் கீழ்க் குறிப்பிடப்படும் விடயங்களுக்கு கேள்விகள் இரு பிரதிகளில் 11—11—1999 ஆம் திகதி காலை 10. 00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். இதே தினம் பி.ப. 14.00 மணிக்கு கேள்விப படிவங்கள் திறக்கப்படும்.

| | கேள்வி விவரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 1. | மரக்கறிச் சந்தை வல்வெட்டித்துறை. | 40,000/- | 1000/- | 100/- |
| 2. | மீன்சந்தை வல்வெட்டித்துறை. | 12,000/- | 1000/- | 100/- |
| 3. | மாட்டிறைச்சிக் கடை வல்வெட்டித்துறை. | 40,000/- | 500/- | 100/- |
| 4. | ஆட்டிறைச்சிக் கடை வல்வெட்டித்துறை. | 10,000/- | 500/- | 100/- |

மேற்படி வைப்புப் பணமும் கேள்விப்படிவக் கட்டணமும் பணமாகச் செலுத்தப்படுவதன் பேரில் 09—11—1999 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வழங்கப்படும். படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப்படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்பட மாட்டாது. எந்தக் கேள்விகளையும் ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண உரிமையுண்டு. மேலதிக விவரங்கள் இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

சு. சந்திரசேகரம்
தலைவருக்காக
நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை.
19 – 10 – 1999

[சி/9436]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்/ஆனைப்பந்தி மெ. மி. வித்தியாலயம்

## 5 ஆம் தர
## புலமைப் பரீட்சைப் பெறுபேறு - 1999

| | | |
|---|---|---|
| தி. | பிரசாந்தன் | — 153 |
| ஜோ. | நிரோசன் | — 147 |
| கு. | தர்சினி | — 146 |
| சு. | யசோதரன் | — 139 |
| சி. | ரம்மியா | — 138 |
| ச. | கஜேந்திரன் | — 128 |
| ச. | ருஷாந்தன் | — 127 |
| யோ. | கஜன் | — 121 |
| தே. | தேவகி | — 119 |

மேற்படி சித்தியடைந்த மாணவர்களையும் அவர்களைப் பயிற்றுவித்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பா. அ. சங்கம்
யா/ஆனைப்பந்தி மெ. மி. வித்தியாலயம்.

[70226]

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த

## யாழ். புனித ஜோண் பொஸ்கோவின்

அறுபத்தைந்து பிஞ்சுகளும் சேர்ந்து வழங்கும்

# நன்றி நவிலல்

கல்விப் பாதையில் எம் உயர்வுக்கு வித்திட்ட அதிபர்கள் எம் இனிய ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது பணிவான நன்றிகள் பல.

—மாணவர்கள்.

(சி/9471)

## விநாயகர் புடைவை அகத்தினரின்
# தீபாவளி
## சிறப்புத் தள்ளுபடி விற்பனை

சாறிவகைகள், பஞ்சாபி சூட்வகைகள் மற்றும் இன்னோரன்ன புடைவைத் தினிசுகளும் சிறப்புத் தள்ளுபடி விலையில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. வாருங்கள்! வந்து பாருங்கள் சிறப்புத் தள்ளுபடி விலை எப்படியென்று அப்போதுதான் உண்மை புரியும், இந்தச் சலுகை தீபாவளி வரை மட்டுமே. உங்கள் தெரிவிற்கு முந்துங்கள்

62 A, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

[சி/9461]

# உதைபந்தாட்டம்

வலிவடக்கு, ஒக். 22

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறவுள்ள கால் இறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு;

### 16 வயதுப் பிரிவு

★ சண்டிலிப்பாய் இந்து எதிர் சுன்னாகம் தமிழ்க் கந்தையா வித்தி.

★ அராலி இந்து எதிர் மல்லாகம் ம. வித்தி (ஸ்கந்தா மைதானம்)

★ சுன்னாகம் ஸ்கந்தா எதிர் மானிப்பாய் இந்து.

★ வசாவிளான் ம. ம. வித்தி. எதிர் குளமங்கால் றோ. க. வித்தி. (மானிப்பாய் இந்து மைதானம்)

### 18 வயதுப் பிரிவு

★ மானிப்பாய் இந்து எதிர் சுழிபுரம் விக்ரோறியா.

★ யூனியன் எதிர் மகாஜனா (ஸ்கந்தா மைதானம்)

★ சுன்னாகம் ஸ்கந்தா எதிர் சண்டிலிப்பாய் இந்து.

★ அராலி இந்து எதிர் வசாவிளான் ம. ம. வி. (மானிப்பாய் இந்து மைதானம்.) (இ-4-86)

# NOTICE

**UNIVERSITY OF JAFFNA**

Faculty of Medicine

Commencement of Lectures 1998 Batch

The lectures for the 1998 batch (New Admission) of students will commence on TUESDAY 26th OCTOBER 1999 and not on 21 st October 1999 as informed earlier.

– **Registrar**
1999 - 10 - 05.

(C/9465)

# இன்றைய நிகழ்வுகள்

கொ[illegible] அருள்மி[illegible] வைரவர் ஆலய அறநெறிப் பாடசாலையினர் நவராத்திரி தினத்தை முன்னிட்டு [illegible] மாணவர்களிடையே நடத்திய [illegible] சமயசார் போட்டிகளில் [illegible] யடைந்தவர்களுக்கான [illegible] சில் வழங்கும் வைபவம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

அறநெறிப் பாடசாலை அதிபர் திருமதி கு. சண்முகதாஸ் தலைமையில் நடைபெற உள்ள இந்த நிகழ்வில் ''வைரவர் வழிபாடு'' எனும் பொருள் பற்றி எஸ். சணேஸமூர்த்தி சொற்பொழிவு நிகழ்த்துவார். (இ-3-8)

★ ★ ★

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சமூகக்கல்வி மன்றத்தின் ஏற்பாட்டில் ஐக்கிய நாடுகள் தினவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை மன்றத் தலைவர் பா. லோகேஸ்வரன் தலைமையில் ரதிலக்ஷ்மி மண்டபத்தில் நடைபெறும்.

கலாசாலைஅதிபர் மு.பரஞ்சோதி ஆசியுரையும், காப்பாளர் திருமதி ஜெ. திபாகலிங்கம் வாழ்த்துரையும் வழங்குவர்.

யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறைத் தலைவர் பேரா

[illegible] இரா. சிவசந்திரன் [illegible] ருநினைவாக [illegible] கருத்[illegible] [illegible] ழ [illegible] மாவட்ட [illegible] பாளர் எஸ். சிறீதரன் [illegible] [illegible] கொள்வர். (இ-3

[illegible] வீதியில் [illegible] விவசாய வாய்க்காலை திருத்தும் சிரமதானப் பணி இன்று காலை 10.00 மணி முதல் இடம்பெறவுள்ளது.

இளைஞர் சேவை மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்தச் சிரமதானப் பணியை அந்த மன்றத்தின் மாவட்ட பணிப்பாளர் ஆரம்பித்து வைப்பார்.

(இ-3-73)

★ ★ ★

தென்மராட்சி வலயப் பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாட நூல் விநியோகம் இன்று சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

(இ-3-133)

# கிரிக்கெட்

கல்வியங்காடு, ஒக். 22

கல்வியங்காடு நொதேண் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'பரா' வெற்றிக்கேடயத்துக்கான 7 பேர் பங்கு பற்றும் 12ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இன்றைய ஆட்டத்தில் அரியாலை காந்தி வி. க., ஸ்ரீ முருகன் வி. க. ஆகியன மோதுகின்றன.

(இ-4)

# வீரர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக் 22

கடந்த 9 ஆம் திகதி மட்டக்களப்பு சென்று அங்கு நடைபெற்ற மூன்று போட்டிகளிலும் வெற்றிபெற்று யாழ். திரும்பியுள்ள 15 வயதுக்கு உட்பட்ட யாழ். மாவட்ட கிரிக்கெட் அணியின் வீரர்களையும் உத்தியோகத்தர்களையும் நாளை காலை 1'.30 மணிக்கு யாழ் மத்திய கல்லூரியில் ஒன்று கூடுமாறு யாழ். பாடசாலைகளின் கிரிக்கெட் சங்கத் தலைவர் எஸ். இராசதுரை கேட்டுள்ளார். [இ-4]

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு

# லிங்கம்ஸ் சில்க் ஹவுஸ்

வழங்கும்

## மலிவு விற்பனை

▶ 3 ஜோயெற் No. 1 சாறிகள் — 1000/- மட்டுமே!
▶ யப்பான் சூட்டிங் லெந் — 200/-
▶ சைனா துவாய் — 175/-
▶ மாட்டின் சேட் பெரிது — 200/-
▶ மாட்டின் சேட் சிறியது — 160/-
▶ சேட் வகைகள் — 250/-
(கஸ்பர், கிறேக், ஜெயின்ற் இன்னும் பல)

ஓ 1 மீற்றர் பட்டர் சில்க் பிறின்ரெட் — 75/-
ஓ 1 மீற்றர் சேட்டிங் — 70/-
ஓ பூட்டு சாறம் — 175/-
ஓ ஸ்கேட் & பிளவுஸ் — 350/- — 450/-
(கலர், பன்சி, வெள்ளை)

★ கரொட்ஸ் T சேட் வகை குறித்த விலையில் இருந்து 50 ரூபா கழிவு

♣ காஞ்சிபுரம் ♣ மணிப்புரி சாறி வகைகள்
♣ ஸ்கேட் & பிளௌஸ்
♣ (F) புறொக் (M S L) வகைகளும்

மலிவுவிலையில் இன்று முதல் விற்பனை செய்யப்படுகின்றன.

★ சொற்ப கையிருப்பு மட்டும் உண்டு.

தேவைக்கு முந்துங்கள்

## லிங்கம்ஸ் சில்க் ஹவுஸ்


18, நவீன சந்தை மேல்மாடி,
யாழ்ப்பாணம். (சி/9463)

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் ஐப்பசித் திங்கள் 6 ஆம் நாளும் ஆங்கிலம் (23—10—1999) சனிக்கிழமை ஆகியதும் உத்திரட்டாதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய காலை 6-32 மணி முதல் 8-08 மணி வரையுள்ள துலா லக்கின சுப வேளையில்

எமது கனிஷ்ட புதல்வன்
திருநிறை செல்வன்
**சுதன்**
(தேசிய வைத்தியசாலை, கொழும்பு)



எமது ஏக புதல்வி
திருநிறை செல்வி
**நந்தினி**
(பொது வைத்தியசாலை, கண்டி.)

ஆகிய இருவருக்கும் இறையருள் கொண்டு பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு கொழும்பு கல்லொக் வீதியில் அமைந்திருக்கும் வெள்ளவத்தை ''மயூராபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தான சுப்பம்மாள் கல்யாண மண்டபத்தில்'' நடைபெறும் திருமண வைபவத்துக்குச் சம்பந்தப்பட்ட பெரியோர்கள், நண்பர்கள் சகலருக்கும் அழைப்பு விடுக்கிறோம். தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் சமுகம் தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் காலை விருந்துபசாரத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் இரு வீட்டாரும் அழைக்கின்றோம். அவ்வண்ணம் சமுகம் தரமுடியாத பெரியோர்கள், நண்பர்கள் சகலரதும் ஆசீர்வாதங்களையும் நல்வாழ்த்துக்களையும் வேண்டி நிற்கும்

திரு. சு.க. சாம்பசிவம்,
திருமதி தனலக்ஷ்மி சாம்பசிவம்,
''பிருந்தா''
5ஆம் லேன், மானிப்பாய் வீதி,
உடுவில், சுன்னாகம்.

திரு. செ. துரைராசா (ஈஸ்வரராஜ்),
திருமதி இராஜேஸ்வரி துரைராசா
(அமரர்)
''சிவபதி'',
கண்டி வீதி, சாவகச்சேரி.

கொழும்பு முகவரி:- ''Ebenazer Court'',
12A, Ebenazer place,
Dehiwela. T.P. No 761088

(சி/9457)

# கண்ணீர் அஞ்சலி

அமரர்

## சின்னத்துரை கிருஷ்ணர்

(தலைமை அலுவலகக் கூட்டுறவுப் பரிசோதகர்)

எமது சக அலுவலராகிய அமரர் சின்னத்துரை கிருஷ்ணர் [வதிரி, கரவெட்டி) அவர்களின் மறைவையிட்டு ஆழ்ந்த மனத்துயரம் அடைகின்றோம். அவரின் மறைவினாற்துயருறும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் கவலையையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**யாழ். கூட்டுறவுத்திணைக்கள உத்தியோகத்தர், நலன்புரிச் சங்க உறுப்பினர்கள்.**

கூட்டுறவு அலுவலகம்,
18/10, வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.

[சி/9462]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...ம் இரு நாள் ...ண்காட்சி

...ழ்ப்பாணம், ஒக் 22
...பல்கலைக்கழகத்தில் ...விழாவையொட்டி ...படும் கண்காட்சி இரு தினங்கள் நீடிக் ...திருப்பதாகப் பல் ...கழக வட்டாரங்கள் ...த்தன.

...று முன்தினம் ஆரம்ப இந்தகண்காட்சி இன்று ...யாக இருந்தது. பல வண்டுகோளை அடுத்து ...ாயும் நாளை மறுதின இடம்பெறும் எனத் தெரி ...ப்பட்டது.

...தே நேரம் — ஏராளமான ...சாலை மாணவர்கள் ...ற்று கண்காட்சியை கண்டு ...த்தனர்.

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதியாகப் பதவி ஏற்கும் பட்சத்தில் 24 மணிநேரத்தில் யுத்தத்தை நிறுத்துவேன் என்று கூறமாட்டேன் உடன் சகல கட்சிகளுடனும், விடுதலைப் புலிகளுடனும் பேசி விரைவாக யுத்தத்தை நிறுத்துவேன்.

ஜனாதிபதித் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு கிடைக்கும் தமிழர்களின் வாக்குகளை விட கூடுதலான தமிழர்களின் வாக்குகள் எனக்குக் கிடைக்கும்.

இனப்பிரச்சினைக்கு 3 ஆம் தரப்புத் தேவை இல்லை. 3 ஆம்தரப்பு உதவியாளர் ஒருவரே தேவை. அதன் மூலம் இரு தரப்புகளுக்கும் இடையில் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் — என்றார். (இ 3


சிற்றியின் அதிரடி மலிவு விற்பனை
குதூகலமான உங்கள் தீபாவளியின் செலவை மீதப்படுத்த
**வீற்றுத் தீர்த்தல்**
இன்றே முந்துங்கள் இன்னும் சில தினங்கள் மட்டுமே
**சிற்றி ரெக்ஸ் அன் ரெயிலர்ஸ்**
73, பெரிய கடை, யாழ்ப்பாணம்.
(சி/9409)


## பரிசளிப்பு விழா

குருநகர், ஒக். 22

அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையின் பரிசுத்தினம் இன்று காலை 11-00 மணிக்கு அதிபர் பொ. நடராசா தலைமையில் வித்தியாலயத்தின் பிரதானமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நில அளவைத் திணைக்கள அளவையாளர் செ. பாலகந்தரம் பிரதம விருந்தினராகவும் யாழ். கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி மீ. அருன்நேசன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (இ-8-51)


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

**யாழ்ப்பாணக் கல்லூரி புலமைப்பரிசில் 1999**

இவ்வாண்டு நடைபெற்ற ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் போட்டித் தேர்வில் சித்தியெய்திய யாழ்ப்பாணக்கல்லூரி மாணவர் - மாணவியரை வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

மாணவர் பெயர்கள்:,

| | | | |
|---|---|---|---|
| 1. | Kesavan Y. | — | 157 |
| 2. | Thulasika S. | — | 154 |
| 3. | Vasiharan P. | — | 147 |
| 4. | Hemachandra P. | — | 143 |
| 5. | Sathyaa K. | — | 140 |
| 6. | Sunnithira S. | — | 136 |
| 7. | Senthooran J. | — | 135 |
| 8. | Thuwarakan S. | — | 135 |
| 9. | Senthooran P. | — | 132 |
| 10. | Sugarniya J. | — | 129 |
| 11, | Yathusaiyera S | — | 127 |
| 12. | Sarangan M. | — | 126 |
| 13. | Kiritharan G. | — | 125 |
| 14. | Sinthu Y. | — | 124 |
| 15: | Sutharsanan Y | — | 120 |

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்

வட்டுக்கோட்டை. (சி/9469)


## களுத்துறை...

(முதலாம் பக்கத் தொடர்) குமார் பொன்னம்பலம் மூலமாக கொழும்பில் உள்ள இந்தியத் தூதரிடம் கையளித்தனர்.

நான்கு குற்றவாளிகளுக்கும் கருணை காட்டப்படும் வரை தமது போராட்டம் இடம்பெறும் என்று அவர்கள் அறிவித்துள்ளனர் (இ-3)

## நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்) வெட்டு அமுல்செய்யப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சில இடங்களில் அடிக்கடி ஏற்படும் மின்தடை குறித்து மின்சாரசபைக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவை குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)


இலங்கை ...
வரிசையில்) கேட்டு ஆ...
2?-10-1999 இலிருந்து சாது செலப...
தொடர் செய்திகளை ஒவ்வொரு சனிக்கிழமையும்
வழங்குவார்
புதிய ஆரம்பம்.
தபால்பெட்டி 1
பருத்தித்துறை. (70206)



**சுனில் ஆட்ஸ்**

★ Photo Chorome ★ Acme
❉ Photo Friends ★ Colour Chorome

நீங்கள் விரும்பும் **Colour Lab** இல் கழுவிப் பெற்றுக்கொள்ளலாம்.

▶ 11-10-99 வரை எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட கலர் படச் சுருள்களுக்கான படங்கள் வந்துவிட்டன.

▶ 25-10-99 அன்று படச்சுருள்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும்.

**சுனில் ஆட்ஸ்**
272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/9459)



**நல்ல சமாரியன் நற்செய்திக் கூட்டம்**

உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும். லூக்கா. 19:42

23 - 10 - 99 சனி பிற்பகல் 2 30 மணியளவில் சங்கானை பிரதேச செயலகத்தின் திறந்த வெளி அரங்கில் நற்செய்திக் கூட்டம் நடை பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

நிகழ்ச்சிகள்:- இயேசு அற்புதர் நாடகம் மற்றும் பக்தி விருத்திக்கேதுவான பாடல்கள், அன்புக்குரிய நற்செய்தி வழங்கி பின் தீராத வியாதி உள்ளவர்களுக்கும் சமாதானம் இன்றித் தவிக்கிற யாவருக்குமாக இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கப்படும் எனவே அனைவரும் அத்தருணம் கலந்துகொண்டுவிடு. தலைபெற்றுச் செல்லும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

மேலும் அனைத்து திருச்சபைகளையும் இதில் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

நன்றி.

நல்ல சமாரியன் தேவாலயம்
கோண்டாவில்.
(70808)



SALE SALE SALE SALE

**பண்டிகைக்கால விசேட விலைத் தள்ளுபடிகள்**

விரையுங்கள்;
தீபாவளி தினுசுக்ளை தேர்ந்தெடுக்க்
யாழ். நகரில
'ராம் சில்க்'
புடைவையகம் தேடிவாரீர்

**ராம் சில்க்** 109, மின்சார நிலைய வீதி, யாழ்நகர்.
(V. S. B குறாப் அருகில்) (70228)



**உதயம்**

சகல வைபவங்களுக்கேற்ப அனைத்துப் பொருள்களும்
**வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்**

குசன் கதிரைகள் · பிளாஸ்ரிக் கதிரைகள் · இரும்புக் கதிரைகள் · மடிப்புக் குசன் கதிரைகள் · தகரப் பந்தல்கள் · மணவறை வகைகள் · சோடினைகள் · சில்வர், பீங்கான், ரம்லர் · ஐஸ்கிறீம் கப்ஸ் · நிறைகுடம் செற · குத்துவிளக்கு · பிளாஸ்ரிக்வாளிகள் · தண்ணீர் பரல் · பந்திப் பாய் · பிளாஸ்ரிக் பாய்கள் · கம்பளம் · காபற் · தறப்பாள் · சமையல் பாத்திரங்கள் · கிடாரங்கள் · மின் விசிறிகள் இன்னும் பல

★ வாகன வசதிகளும் உண்டு. ( குளிரூட்டப்பட்ட திருமணக் கார் )

குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை

அத்துடன்
வெளிநாட்டு – உள்நாட்டு தொலைத் தொடர்புகளும் குறைந்த கட்டணத்தில் உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம். ( தொலைபேசி இலக்கம்: 2392 )
பக்ஸ் வசதிகளும் உண்டு.

காலை 5-30 தொடக்கம் மாலை 8-00 மணிவரை திறந்திருக்கும்

**உதயம் பொருள்கள் வாடகை சேவை**

172, பிரதான வீதி, மக்கள்வங்கி அருகில், யாழ்ப்பாணம்.
(70205)


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 22-10-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org